# வலு

ஜனவரி - மார்ச் 2021

காலாண்டிதழ்

இதழ் - 29

மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

ரூபா 120/=

ISSN : 2513 - 2989
ISBN : 978 – 955 – 23 – 0019 – 3



வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

04 காய்களை நகர்த்தித் தன் வாழ்க்கையை உயர்த்தியவர் - ஜெனிதா -

38 முற்றத்து மல்லிகை



வலுக் கொடுக்கும் ஒரு நிறுவனத்தின் முகாமையாளராக
திரு.குமரவேள் கந்தசாமி

ISSN 2513-2989

வெளியீடு :
கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

# வலு

ஜனவரி – மார்ச் – 2021 காலாண்டிதழ் இதழ் – 29

மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களையும்
பொது விடயங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை


**பிரதம ஆசிரியர்**

திரு. நா. கீதா கிருஷ்ணன்,
karuvivalu@gmail.com
Tel : 076 638 5563

**நிர்வாக ஆசிரியர்**

திரு. கணபதி சர்வானந்தா
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)

**இதழ் குழு ஆலோசகர்**

திரு. க. தர்மசேகரம்

**ஆசிரியர் குழு**

திரு. செ. சசிராஜ்,
திரு. ச.க. தேவதாசன்
திருமதி.சு. சுபோதினி

**உதவி ஆசிரியர் குழு**

திருமதி ஹே. லுசிந்தன்
திருமதி சி. வசந்தன்
செல்வி லோ. டனுசிகா



**வெளியீடு**

**கருவி மாற்றுத் திறனாளிகளின்**
**சமூக வள நிலையம்,**
இல. 290, பருத்தித்துறை வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
தொலைபேசி : 021 205 4224


## பொருளடக்கம்


எண்ணக் கிண்ணம் - கவிதை - 2

பெண்களுக்கு ஒரு பொற்கிண்ணம் -3

வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் - 4
*ஏ.ஜே. ஞானேந்திரன்*

வலுவிடம் கேளுங்கள் - 6

வலைவெளி ஓட்டிசம் (Autism) - 7
*பாலபாரதி*

செய்திச் சாளரம் - 11

தசரசம் - 12

எழுதுங்கள்; வெல்லுங்கள் - 37

முற்றத்து மல்லிகை - 38

மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா? நவீன தொழில்நுட்ப மாற்றங்கள்! - 41

சிறுகதை - 44

கண்கள் கானும் மௌன மொழி- 46

சமூகப் பணித்தளத்தில் கருவி - 47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணக் கிண்ணம்

தெட்சணாமூர்த்தி கரிதரன்
திருகோணமலை.

# நம் வாழ்க்கை நம் கையில்

நாளைய உலகை வென்றிடும் தோழா
நட்புடன் மனங்களைக் கோர்த்திடு இன்றே
நமக்கும் உண்டு நல்ல வாழ்வு
நன்றே அறிவாய் நயமாய்ச் சொல்வேன்.

படைத்தான் இறைவன் பாரினில் நம்மை
பறக்கும் தட்டாய் பாரினை அளப்போம்.
பாதையில் பள்ளம் பயணத்தை முடிப்பதா?
பாய்ந்தே ஓடு பதக்கமும் உனதே!

ஏங்கித் தவித்த காலம் போனது.
ஏளனப் பேச்சும் எரிந்தே அணைந்தது.
ஏனிந்த வாழ்வு எனக்கு என்று
எண்ணத்தில் முடங்கிட்ட இருளும் விடிந்தது.

இருப்பதைக் கொடுத்து கிடைப்பதைப் பெற்றால்
இயற்கையும் எமது அன்னையின் மடியிலே
இயன்றதை முயன்றால் இலகுவில் வெல்வாய்.
இதுவே என்றும் வெற்றியின் மந்திரம்.

சிறகுகள் உடைந்ததால் சிறுமையோ அடைந்தாய்
சிதைத்திடும் தடையை உதைத்தே வென்றிடு
சிந்தனை செய்தால் நிந்தனை கொய்வாய்.
சிறப்புடன் முடிப்பாய் சில வலிகளைத் தாங்கியே.
வறுமை வாட்டமும் வாழ்க்கையின் பாடம்
வருந்திட்ட மனமும் அனுபவ ஓலை
வரமாய்க் கிடைத்த வாய்ப்பு இதுவே
வந்ததை விடுத்து வருவதை நோக்கிடு.

உலகம் என்ன ஒருவரின் சொத்தா!
உள்ளதை எல்லாம் அவரே பெற்றிட
உனக்கும் உரிமை அதிலே உண்டு.
உரக்கச் சொல்லு உழைப்பின் வழியே.

கடந்ததை நினைத்துக் கடமையை மறந்தால்
காலக் கடலின் வெள்ளத்தில் அமிழ்வாய்
கடிகார முள்ளாய்க் கணத்தில் செயற்படு.
கல்லும் கரையும் கற்பனை அல்ல.

அனைத்தையும் பெற்றவன் அடைந்தது என்ன?
அவயத்தில் இல்லை ஆளுமை விருத்தி
அனுபவம் நமக்கு துணையுள்ள ஆசான்
அறிவைக் கொண்டு அகிலத்தில் உயர்ந்திடு.

இழந்தது போதும் பிறந்தது காலம்
இனியும் இருட்டில் உழல்வது மடைமை
இடுக்கண் வரினும் இனிமையில் திளைத்திடு
இதுவே என்று திடமாய் நம்பிடு.
நடப்பதை விடுத்து நாடிடு இலக்கினை
நம் வாழ்க்கை நம் கையில்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு ஒரு பொற்கிண்ணம்

மார்ச் 08 சர்வதேச மகளிர் தினம் பெண்களின் சமத்துவம், உரிமைகள் என்பனவற்றை வலியுறுத்தி இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இன்று உலகளாகிய ரீதியிலும் நாடளாவியரீதியிலும் ஆண்களை விடவும் பெண்களே அதிகளவில் உள்ளதாகச் புள்ளி விபரங்கள் சில தெரிவிக்கின்றன.

முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் தற்பொழுது சகல துறைகளிலும் பெண்கள் கால் பதித்துள்ளனர். பாடசாலைகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள் எனப் பல இடங்களிலும் பெண்கள் அதிகளவில் பணியாற்றுகின்றனர். அத்தோடு வீட்டுப் பணிகளிலும் இவர்களது பங்களிப்பு அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும்.

பல சுமைகளைத் தாங்கி வாழும் பெண்கள் சமத்துவமாக நடத்தப்படுகின்றார் களா? தமக்கான உரிமைகளை முழுமையாக அனுபவிக்கின்றார்களா? மகிழ்ச்சி யான குடும்ப வாழ்க்கையை வாழ்கின்றார்களா? என்ற வினாக்களுக்கான பதிலைத் தேடும்போது ஆம்! என எத்தனை பெண்கள் சொல்வார்கள் என்றால் அது மிகக் குறைந்தளவானதாகவே இருக்கும். இதற்குக் காரணம் ஆண்கள் மட்டுமல்ல சில பெண்களும் என்றுதான் சொல்ல வேண்டும்.

பெண்கள் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். தொழில் புரியும் இடங்கள், போக்குவரத்துக்கள், அலுவலகங்கள், அவர்களது இல்லங்கள் எனப் பல இடங்களிலும் இவர்கள் மேற்குறிப்பிட்ட வகையில் பாதிப்புக்குள்ளாக்கப்படு வதனை ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக் கால அதிதிவீர தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகப் பாவனைக்கு வந் துள்ள கைபேசி மற்றும் அதிலுள்ள மென்பொருட்கள் என்பன அறிந்தோ அறியாமலோ இவர்களை அதில் சிக்க வைத்து விடுகின்றன. காதல் என்ற பெயரில் சில ஏமாற்றுக்காரர்களின் ஆசை வார்த்தைகளில் கட்டுண்டு விடுபட முடியாமல் தவிக்கும் நிலைக்குச் சில பெண்கள் தள்ளப்படுகின்றனர். ஆடம்பர வாழ்க்கை, அழகு சாதனப் பொருட்கள்மீதான மோகம் என்பனவும் பெண்களது வாழ்க்கையைக் கடனுக்குள் மூழ்கடித்து விடுகின்றது.

மாற்றுத் திறனாளிப் பெண்களைப் பொறுத்தவரையில் இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மிக அதிகம். பிரச்சினைகளுக்குள் அகப்படாமல் தங்கள் வாழ்க் கையை எப்படி நடத்துவது? என்பதில் இவர்களும் மிக விழிப்பாக இருக்க வேண்டும். பிரச்சினைகளுக்குள் அகப்பட்டவர்கள் மனதிடத்துடன் வெளியில் வர வேண்டும். மனதைச் சோர விடுவது; தெரியாதவர்களிடம் உதவிகளைக் கோருவது ஆரோக்கிய மானதல்ல.

இவ்வாறான நிலைகளிலிருந்து பெண்கள் மீண்டெழச் சமூகத்திலுள்ள அனைவரும் துணையாக இருக்க வேண்டும். இதற்கும் மேலாக ஒவ்வொரு பெண் களும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் திறன் பெற்றவர்களாகவும், தாம் எப்படி வாழ வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவர்களாகவும் சிந்தித்துச் செயலாற்றுபவர்களாகவும் எதனையும் செயற்படுத்த முன்னர் நன்கு சிந்தித்து, நிதான மாக முடிவெடுப்பவர்களாகவும் ஏமாற்றுக்காரர்களின் வலைகளுக்குள் சிக்குப்படாத வர்களாகவும் தங்கள் வருமானத்திற்குகேற்ப தங்கள் வாழ்வை வடிவமைத்துக் கொள்பவர்களாகவும் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் இருந்து உங்கள் வாழ்க்கை எனும் பொற்கிண்ணத்தில் தினமும் சந்தோஷ பானத்தை அருந்தி மகிழுங்கள்.

**திரு. நா. கீதா கிருஷ்ணன்**
பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்



# காயங்களை நகர்த்தி, தன் வாழ்க்கையை உயர்த்தியவர்...

ஏ.ஜே. ஞானேந்திரன்

உடல் வலுவில் ஏதோவொன்று குறைந்து விட்டதால், உலகமே இருண்டு விட்டதாக நினைப்பவர்கள் பலர். ஆனால் அவர்களில் சிலரோ தமக்குள்ள குறையைக் குறையாக எண்ணாது அதையே தமது வெற்றிப் படிகளாக மாற்றி முன்னேறி விடுகிறார்கள். வாழ்வில் மின்னும் தாரகையாகி விடுவதோடு மற்றவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாகவும் இருக்கிறார்கள். வாழ்வில் நிறைவுள்ளவர்களாக மகிழ்ச்சியோடு வாழ்கின்றனர்.

அந்தவகையில் திருச்சி, பொன்மலைப் பட்டியைச் சேர்ந்த ஜெனிதா வாழ்க்கையில் மட்டுமல்ல சர்வதேச விளையாட்டிலும் வெற்றியீட்டிப் பல சாதனைகளைச் செய்திருக்கிறார்.

பொதுவாக விளையாட்டுகள் அனைத்துமே உடல் ஆரோக்கியத்தைப் பேண உதவுகின்றன. அதிலும் செஸ் விளையாட்டு மூளைக்குச் சவாலானது; சிந்திக்கும் ஆற்றலை வளர்ப்பது.

ஜெனிதா 2017இல் “இன்டர்நேஷனல் மாஸ்டர்” என்ற கௌரவம் பெற்றவர். அந்தக் கௌரவ பட்டத்தைப் பெற்ற உலகின் முதல் மாற்றுத் திறனாளி எனும் பெருமையும் ஜெனிதா வுக்குரியது.

அது மட்டுமல்லாது 2018இலும் ஆசிய பரா விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றுள்ளார். அத்துடன் இந்தோனேசிய நாட்டின் தலைநகரான ஜகார்த்தாவில், 2018 இல் ஆசிய பரா விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அந்தப் போட்டியில் 18 வகையான விளையாட்டுகள் புதிதாகச் சேர்க்கப் பட்டன. ஆசியாக் கண்டத்தில் உள்ள நாடுகளில் 44 நாடுகள் கலந்து கொண்ட மிகப் பெரிய பாரா விளையாட்டுப் போட்டி அதுவாகக் காணப்பட்டது. சர்வதேசத்திலிருந்து பல மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்ட அப்போட்டியில் இந்தியாவிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட்டும் 198 வீரர் கள் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.

அதில் ஜெனிதா ஆண்டோ தனிநபர் செஸ் போட்டியில் பங்குபற்றியிருந்தார். இப்போட்டியில் வெற்றி பெற்றுத் தங்கப் பதக் கமும் மற்றொரு தனிப்பட்ட செஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கம், அணிகள் சார்பில் நடந்த போட்டிகளில் ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் எனப் பலவற்றைத் தன்வசப்படுத்திக் கொண்டார்.

ஸ்லோவாக்கியா நாட்டின் ரூசம்பர்க் நக ரத்தில் உலக மாற்றுத் திறனாளி தனிநபர் 19ஆவது செஸ் போட்டி கடந்த 2019 ஜூன் 27ஆம் தேதி நடைபெற்றது. பதின்மூன்று நாடுகளிலிருந்து மொத்தம் 44 சர்வதேச வீரர்கள் கலந்து கொண்ட அப்போட்டியில் இந்தியா சார்பாகக் கலந்து கொண்ட ஜெனிதா ஆண்டோ, முதல் பரிசான தங் கத்தை வென்று சாதனை படைத்துள்ளார். இது வரை ஜெனிதா ஆறு சர்வதேசப் போட் டிகளில் பங்குகொண்டு தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இளம்பிள்ளைவாத நோய் (போலியோ) தாக்கி மாற்றுத் திறனாளியாகிப்போன ஜெனிதா தனக்கு ஏற்பட்ட குறையை ஒரு பொருட்டாக மதியாது தன்னம்பிக்கை கொண்டதனால் உலக அளவில் பல பதக் கங்களை வாங்கிக் குவித்திருக்கிறார். தன்னம்பிக்கை மட்டும் இருந்தால் வாழ்க் கையை ஜெயித்துக் காட்டலாம் என்பதற்கு ஜெனிதா ஒரு முன்மாதிரியாக இருப்பதோடு மட்டுமல்லாது, அவர் தனது வாழ்க்கையைப் பிறருக்கு ஒருநல்ல பாடமாக்கியுள்ளார். அந்த வகையில் ஜெனிதா பாராட்டுக்குரியவர்.

அவர் தன்னைப் பற்றிக் குறிப்பிடுகையில் "தனக்கு மூன்று வயதாக இருக்கும்போது போலியோ தாக்கியதாகவும் அதனால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டதோடு வலது கையும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட் டுள்ளார். அதில் தன்னைத் தனது தந்தை யாரே பாடசாலைக்குத் தூக்கிச் சென்றதை நன்றியோடு நினைவு கூர்கிறார். அவர் தந்தையிடமிருந்தே "செஸ்" என்ற இந்தக் காய் நகர்த்தல் விளையாட்டைக் கற்றுக் கொண்டார். தனது தந்தை பொறுப்புள்ள தந்தையாக மட்டுமல்லாமல் நல்ல குருவா கவும் இருப்பதுவே தான் பெற்ற பாக்கியமே" என்றும் குறிப்பிட்டார்.

இவர் அஞ்சல்வழிக் கல்வியினூடாக பி.கொம் பட்டம் பெற்றவர். வகுப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எப்பொழுதுமே முதல் மாணவி எனச் சொல்லிப் பெருமைப்படும் ஜெனிதா தனது அடுத்த இலக்கு "கிராண்ட் மாஸ்டர்" பட்டந்தான் என்கிறார். அதனால் 2024ஆம் ஆண்டு நடக்கவுள்ள ஆசியப் போட்டியில் பங்குபற்றி வெற்றி கொள்ள வேண்டும் என்ற வேட்கையோடு அதற்கு வேண்டிய பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

தினமும் ஆறு மணி நேரம்வரை பயிற்சி எடுக்கிறார். இவை தவிர செஸ் விளையாட்டு பற்றிய புத்தகங்கள் பலவற்றைப் படித்து விளையாட்டின் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்கிறார். எப்படியெல்லாம் 'மூவ்' செய்து வெற்றி பெறலாம் என்பதை எழுத்தின் வழியே தெரிந்துகொண்டு போட்டிகளில் சதுரங்கக் காய்களை நகர்த்துகிறார் ஜெனிதா. இடது கையால் அவர் நகர்த்தும் ஒவ்வொரு 'மூவ்'வும் எதிராளிக்குச் சிக்கலைக் கொடுப்பவையாக இருப்பதே இவரின் வெற்றிக்குக் காரணமாக அமைகின்றது. தான் கொண்ட இடைவிடாத பயிற்சிகளின்மூலமே ஆறு முறை தங்கங்களை வெல்ல முடிந்ததாகப் பெருமையோடு கூறுகிறார் ஜெனிதா.

அவருக்கு 2015ஆம் ஆண்டு தொட்டுத் தமிழக அரசும், இந்திய விளையாட்டுத் துறையும் நிதியுதவி அளித்து வருகின்றன. இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற பட்டியலில் ஜெனிதாவுக்கே முதலிடம். தனது சவால் நிறைந்த பயணத்தில் பல வெற்றிகளை வென்று குவிக்கும் ஜெனிதா எமக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகி இருக்கிறார். இனி வரும் போட்டிகளிலும் பங்குபற்றி சிறந்த வெற்றியாளராகத் திகழ வலுவின் வாழ்த்துகள். ●

# வலுவிடம் கேளுங்கள்

பார்த்தீபன் மன்னார்.

♦ **நான் அலுவலகம் ஒன்றிற்குச் சென்றிருந்தபொழுது வாய் பேச முடியாத ஒருவர் அங்கு பணியாற்றுகின்ற பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளும்பொழுது இடர்ப்படுவதைக் கண்டேன். வாய் பேச முடியாதவர்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுக் கொள்வதை எவ்வாறு இலகுவாக மேற்கொள்ள முடியும் என்பது பற்றிக் குறிப்பிட முடியுமா?**

♦ நிச்சயமாக இது ஒரு கவனம் கொள்ளத்தக்க விடயமாகும். செவிப்புலனற்றவர்கள் சமூக மட்டத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அவற்றில் ஒன்றுதான் தாங்கள் குறிப்பிட்டுள்ள தொடர்பாடல் சார்ந்த பிரச்சினை.

குறைந்த பட்சம் மக்களுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்ற அலுவலகங்களில் கட்டாயம் சைகை மொழி தெரிந்த ஒருவராவது இருத்தல் வேண்டும் அல்லது அத்தகைய அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்களுக்குச் சைகை மொழி சார்ந்த பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும். எது எவ்வாறு இருப்பினும் அலுவலகங்களில் பணி புரிகின்றவர்களோ அல்லது ஏனையவர்களோ தன்னார்வமாக சைகை மொழியைக் கற்கின்றபொழுது இவ்வாறான பிரச்சினைகள் மேலெழாது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைவெளி
(கடந்த இதழின் தொடர்ச்சி)

## மாற்றுத் திறன் குழந்தைகள் மற்றும் அவரது பெற்றோரின் சுயமரியாதை

# ஆட்டிசம்

பாலபாரதி


அறிவுசார் பலவீனங்கள் (Intellectual Impairment) எனும் குடையின்கீழ் பல்வேறு குறைபாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. கற்றல் குறைபாடு, ஆட்டிசம், டவுன் சிண்ட்ரோம், செரிபரல் பால்சி, மனவளர்ச்சிக் குறைபாடு என நீளும் இப்பட்டியல் சற்றே பெரியது.

இந்த உலகில் இருக்கும் எல்லாக் குறை பாடுகளிலும் இந்த அறிவுசார் பலவீனக் குறைபாடுகளே மிகவும் கீழானதாகப் பார்க்கப்படுகிறது என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

சமூகத்தில் நிகழும் எல்லா ஏற்றத்தாழ்வு களும் பெரும்பாலும் பிரமிடு முறையில்தான் இருக்கும். மேலே ஒருவன், அதற்குக் கீழே சிலர், அதற்கும் கீழே இன்னும் பலர் என்பதாகவே அந்த அடுக்குமுறை இருக்கும். இந்தப் பிரமிடின் உச்சியில் அவ்வையின் வாக்குப்படி, கூன், குருடு, செவிடு அற்றுப் பிறந்த அரிய மானிடர்கள் இருப்பார்கள் என்று கொண்டால் மாற்றுத் திறனாளிகள் அதற்கு அடுத்த படியில் வைக்கப்படுவர். ஆகக் கடைசியான வரிசையில்தான் அறிவுசார் பலவீனம் கொண்டோர் நிற்பர். இதில் கூடுதலாக அறிவுசார் பலவீனம் கொண்டோரின் பெற்றோரும் அவ்வரிசை யில் நிறுத்தப்படுகின்றனர் என்பதே யதார்த்தம்.

என்னுடன் பல காலமாகப் படித்த நண்பர் ஒருவரைச் சமீபத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நான் தொடர்ச்சியாக ஆட்டிசம் விழிப்புணர்வுக்காக இயங்கி வருவதும் என் பையனுக்கு ஆட்டிசம் இருப்பதும் அவருக்குத் தெரியும். மருத்துவர்களின் ஆலோசனைப்படி இன்று என் மகன் ஒரு சாதாரண பள்ளிக்குச் சென்று வருகிறான் என்பதும் அவருக்குத் தெரியும். அதன் அவசியம் குறித்தெல்லாம் நான் அவரிடம் அடிக்கடி தொலைபேசி வழியே பேசியும் இருக்கிறேன்.

அவர் தன்னுடைய இரு குழந்தைகளை யும் வேறு பள்ளியில் சேர்ப்பதற்கான முயற்சி யிலிருப்பதாகச் சொன்னார். காரணம் கேட்ட போது அவர் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் சிறப்புக் குழந்தைகள் அதிகமாகச் சேர்க்கப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதாகவும் அதனால் தன் குழந்தைக ளும் அப்படி ஆகிவிடுவார்களோ என்ற அச்சத்தில் வேறு பள்ளி தேடுவதாக மிகவும் இயல்பாகச் சொன்னார்.

அவருக்கு என்னைப் புண்படுத்தும் நோக்கமொன்றும் இல்லை என்று நான் அறிவேன். ஆனாலும் மிகவும் இயல்பாக, எந்த விதத்திலும் அது தவறென்று எண் ணாத அவரது பேச்சு என்னை மிகவும் சங்கடப்படுத்தியது. இத்தனை எழுதியும் பேசியும் நெருங்கிய நண்பருக்குக் கூட நம் தேவைகளைப் புரிய வைக்க முடிய வில்லையே என்ற நெருடல்தான் அதற்குக் காரணம்.

இது ஒரு வகையென்றால், இன்னொரு வகை அனுபவமும் இருக்கிறது. என் நண் பன் ஒருவனுக்குச் சமீபத்தில் மணமாகி, குழந்தை பிறந்திருந்தது. அக்குழந்தையைப் பார்க்க அவன் வீட்டுக்குச் செல்லலாம் என நாங்கள் ஒவ்வொரு முறை முயற்சிக்கும் போதும் ஏதாவது ஒரு காரணம் கூறி அதைத் தட்டிக் கழித்து வந்தார். சில தடவைகள் முயன்றபின் நாம் போய்ப் பார்ப்பதினால் தன் குழந்தைக்கு ஏதேனும் ஆகிவிடுமோ என்று அவர் அச்சம் கொள்கிறாரோ என்று எங்க ளுக்கு எண்ணத் தோன்றியது. அதன்பின் அவன் குழந்தையைப் பார்க்கப் போவதைப் பற்றிய பேச்சை நிறுத்திவிட்டோம். இப்போ தும் அவருடன் நட்பு தொடரத்தான் செய்கிறது. போனில் பேசுவது, தனிப்பட்ட முறையில் எங்களைச் சந்திப்பது, என் குழந்தையிடம் அன்பு செலுத்துவது என்று எதிலும் குறையில்லை. ஆனால் அவரது குழந்தையைப் பற்றி மட்டும் எதையும் எங் களிடம் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்ற உணர்வுடன் செயற்படுவது எமக்குப் புரிகிறதுது.

நண்பர்கள் என்றில்லை. இப்படியான எண்ணங்கள் உறவினர்களிடமும் இருக் கவே செய்கிறது.

பொதுவாக குழந்தைகளுக்கு முடி வெட்டு வதென்பது சிரமம். அதிலும் சென்ஸரி பிரச்சி னைகளின் ஊடாக வாழும் ஆட்டிச நிலை யாளர்களின் கதையைச் சொல்ல வேண் டாம். எங்கள் பகுதியில் எல்லா சலூன் கடைகளிலும் என்னையும் மகனையும் பார்த்தால், அலறிவிடுவார்கள்.

அவ்வளவு சிரமத்தை கொடுத்திருக்கி றான் பையன். சரி சாதாரண சலூன் கடை கள் தான் பிரச்சினை. கொஞ்சம் உயர்தரத் தில் இருக்கும் பியூட்டி பார்லருடன் இணைந்த சலூனுக்கு அழைத்துப் போக லாம் என்று போனால், அங்கேயும் அதே கதைதான். ஒரு முறை சென்ற பியூட்டி சலூனுக்கு அடுத்த தடவை போக முடியாமல் போயிற்று. அப்படிப் போனாலும் அவர்களே 'லேட் ஆகும் சார்' என்று அனுப்பி விடு வார்கள்.

வீட்டில் இருந்தே கழுத்து, உடல் எல்லா இடங்களிலும் பவுடர் போட்டுப் போய் முடி வெட்டினோம். ரெயின் கோட்டு போட்டு விட்டு, கழுத்துடன் இறுக்கிப் பிடித்துக் கொண்ட ஆடைகள் போட்டுவிட்டுப் பார்த தோம். எதுவுமே வேலைக்கு ஆகவில்லை. சரி தன் கையே தனக்கு உதவித் திட்டத்தின் படி ஒரு முடிவு எடுத்தோம்.

ட்ரிம்மர் எல்லாம் வாங்கி நாங்களே வீட்டில் முடி வெட்டி விடலாம் என்று முயன் றால், பையனை அழுத்திப் பிடித்து உட்கார வைக்க முடியவில்லை. அவன் தூங்கும் போதுகூட டிரிம்மர் போட முயற்சித்திருக்கி றோம். இவனுக்கு ஆழ்ந்த தூக்கமே கிடை யாது என்பதால் அந்த டிரிம்மரின் அதிர்வு களில் விழித்து விடுவான். பிறகு அவனுக்குப் பிரியமான இசையை உபயோகித்து மெல்ல மெல்ல முடி வெட்டிக் கொள்வது என்பதை அவன் ஏற்றுக் கொள்ளும்படி செய்திருக் கிறோம். ஒரு எடுத்துக்காட்டுக்காக நான் இந்த முடி வெட்டிக் கொள்வதை இங்கே சொல்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல பஸ், ரயில் போன்ற பொதுப் போக்குவரத்துகளை உபயோகிப்பது, பூங் காக்களுக்கு விளையாட அழைத்துப் போவது என எண்ணற்ற இடங்களில் இது போன்ற புறக்கணிப்புகளும் உதாசீனங் களும் எங்களுக்காகக் காத்திருக்கின்றன. பட்டியலிடத் தொடங்கினால் இன்றைய நாளே முடிந்து போகும். சரி, பொது வெளி யில்தான் நிலைமை இப்படி இருக்கிறது அரசு இந்த மனிதர்களை எப்படி நடத்துகிறது என்று பார்த்தால் அங்கும் அதிர்ச்சிதான். ஏற்கனவே சொன்னதுபோல் பல்வேறு பிரிவுகள் இந்த அறிவுசார் பலவீனத்தில் இருந்தாலும் அரசிடம் இது பற்றிய சரியான புள்ளி விபரங்கள் கிடையாது.

அனேகமாக அறிவுசார் பலவீனங்கள் (Intellectual Impairment) எனும் குடையின் கீழ் இருக்கின்ற எல்லாப் பிரிவினரையும் ஒரே மூட்டையாகக் கட்டி மனவளர்ச்சி குன்றியோர் என்ற முத்திரையைக் குத்தி இருக்கிறது அரசு. ஓரளவு சலுகைகள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் கூட அவையும் சரியான அளவில் பாதிக்கப்பட்டோரைச் சென்றடைவதில்லை. இவர்களுக்கு வாக்கு உரிமை கிடையாது, நேரடியாக சொத்து ரிமை கிடையாது எனத் தொடங்கும் இந்த இல்லா மைகளின் பட்டியல் மிகவும் பெரிது.

ஆனால் மேலை நாடுகளில் இது போன்ற குறைபாடுடையவர்களுக்கான விரிவான சட்ட உரிமைகளும் சமூகப் புரிந்துணர்வும் வந்தாகி விட்டது. "எர்லி இண்டர்வென்ஷன்" (Early Intervention) எனப்படும் இளம் பருவத்திலேயே குறைபாடு களைக் கண்டறிந்து சிகிச்சைகளை ஆரம் பிப்பதற்கான ஏற்பாடுகள் இக்குழந்தை களுக்கு மட்டுமல்ல அந்தக் குடும்பத்திற் கான தேவைகளையும் கணக்கில் கொண்டு அரசால் திட்டமிடப்படுகின்றன.

பொதுப்பள்ளிகளில் குறைவான சதவீத பாதிப்புடைய குழந்தைகள் படிப்பதற்கான எல்லா வசதிகளும் செய்து தரப்படுகின்றன. மற்ற குழந்தைகளுக்கு இது சார்ந்த விழிப் புணர்வு, பள்ளிப் பருவத்திலேயே கிடைத்து விடுவதால் அவர்கள் சக மனிதர்களை மதிக்கும் பண்புடையோராக வளர்வதும் கூடுதல் லாபம்.

அமெரிக்காவில் தனியார் துறையில் கிட்டத்தட்ட 7% வேலை வாய்ப்பு, மாற்றுத் திறனாளிகளுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாக ஒரு செய்தி படித்தேன். அப்படியான இட ஒதுக்கீட்டின்படி வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவோரின் ஒரு வருட சம்பளச் செலவை அரசே ஏற்கிறதாம். எனவே அறிவு சார் பலவீனம் கொண்டோராக இருப்பினும், ஓரளவு சமூகத்தில் புழங்கத் தெரிந்தவர்கள் என்றால் அவர்களும் ஏதேனும் வேலை வாய்ப்புப் பெற்று வெற்றிகரமான வாழ் வொன்றை மேற்கொள்ள முடிகிறது.

உங்களில் பலரும் இன்று பெற்றிருக்கக் கூடிய ஆகக் குறைந்த சட்ட, சமூக உரிமை களை அடைய கடந்து வந்த போராட்டங் களை நான் அறிவேன். இப்போதுதான் தங்கள் குழந்தைகளுக்கும் உரிமைகள் தேவை என்றுணர்ந்து அமைப்பாகத் திரளவும் கோரிக்கை எழுப்பவும் முனைந்து கொண்டிருக்கும் எங்களைப் போன்ற பெற் றோருக்கு எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருக்கும் சக போராளிகளான நீங் கள் அனைவரும் உங்கள் வழிகாட்டு தலை யும் அரவணைப்பையும் வழங்க வேண் டும் என்ற கோரிக்கையை முன் வைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி இவ்வாக் கத்தினை நிறைவு செய்கின்றோம்.

தொடரும்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சாளரம்

### விசேட தேவையுடையோருக்கான
## சர்வதேச தினத்தை முன்னிட்டு பிரதமர் வழங்கிய செய்தி

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ "நாட்டின் எதிர்காலம் தொடர்பில் விசேட தேவையுடைய சகோதர, சகோதரிகளின் எதிர்காலமும் நம்பிக்கை கொள்ளக் கூடிய நாளைய தினத்தை உருவாக்குவோமென" விசேட தேவையுடையோருக் கான சர்வதேச தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

விசேட தேவையுடையோருக்கான சர்வதேச தினம் இன்றாகும். 1992 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட முன்மொழிவிற்கமைய ஆண்டுதோறும் டிசம்பர் 03 ஆம் திகதி உலகின் பல நாடுகள் விசேட தேவையுடையோருக்கான தினத்தைக் கொண்டாடி வருகின்றன. இலங்கையும் தொடர்ச்சியாக அதில் பங்குபற்றி வருவதுடன் அது ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணை பெற்ற சர்வதேச நிகழ்வாகும்.

விசேட தேவையுடையோர் தொடர்பான விடயங்களைக் கவனத்தில் கொள்ளல், விசேட தேவையுடையோரின் பெருமை, உரிமைகள், நலன் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு அனுசரணை வழங்குவது என்பன இத்தினத்தை கொண்டாடுவதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

சாதாரண குடிமகன் போன்று, விசேட தேவையுடையவர்களும் சம உரிமைகள் மற்றும் வரப்பிரசாதங்களை அனுபவித்து சமூகத்தில் வாழ முடியும். தற்போது உலகளாவிய ரீதியில் முகங்கொடுத்துள்ள கொவிட்-19 தொற்று நிலைமைக்கு மத்தியிலும் விசேட தேவையுடையோரின் உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியம் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

உலகின் விசேட தேவையுடைய ஒரு பில்லியன் மக்கள் தொகையில் 80 வீதமானோர் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். "அதில் 60 வயதிற்கு மேற்பட்டோரினது எண்ணிக்கை 46 சதவீதமாகும்" என யுனெஸ்கோ அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

விசேட தேவையுடையோரின் எண்ணிக்கை அதிகரித்தல், அபிவிருத்தி அடைந்து வரும் அவர்களுக்குரிய விசேட நிர்மாணத் திறன் மற்றும் ஆற்றல் களை மேம்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும். சுபீட்சத்தின் நோக்கு கொள்கையை மையமாகக் கொண்டு அபிவிருத்தியின் புதிய பாதையில் இலங்கை நுழைந்துள்ள சூழ்நிலையில் விசேட தேவையுடைய சகோதர, சகோதரிகளின் எதிர்காலமும் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை கொள்ளக் கூடிய நாளைய தினத்தை உருவாக்குவோம் என தெரிவிக்க விரும்புகிறேன்.

நன்றி - www.teachmore.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தசரசம்

தொகுப்பு : நா. கீதா கிருஷ்ணன்


01. இலக்கியச் சுவை
02. பாலருக்கு ஒரு கதை
03. இலகு வழி English
04. நலம் தரும் மருத்துவம்
05. பலன் சொல்லும் ஜோதிடம்
06. மாணாக்கருக்கு ஒரு கட்டுரை
07. வெளிநாட்டுப் பயணம்
08. உலகப் புகழ் பெற்ற மனிதர்கள்
09. அதிசயிக்க வைக்கும் உண்மைகள்
10. விலங்கொன்றின் வாழ்க்கை


## 01. இலக்கியச் சுவை

**இராமர் கதை** (கடந்த இதழ் 28இன் தொடர்ச்சி...)

**கானகத்தில் அரக்கர்களை அழித்து முனிவர்களைக் காத்த இராமன்**

இராமபிரான் தம்பி இலக்குவனோடும் சீதாபிராட்டியோடும் காட்டின் தென்திசை நோக்கிப் புறப்பட்டு அத்திரி முனிவர் ஆசிரமத்தை அடைந்தார்கள். இவர்களின் வருகையைக் கண்ட முனிவர் மிக மகிழ்ச்சி அடைந்து அவர்களை ஆசீர்வதித்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்ட மூவரும் தண்டகவனத்தை அடைகின்றனர். அங்கே விராதன் எனும் கொடிய அரக்கன் இவர்களை எதிர்த்தான். அங்கு இடம்பெற்ற போரின் இறுதியில் இராமர் அவ்வரக்கனைத் தனது காலினால் உதைத்தார். இராமன் திருவடிபட்டதும் அவ்வரக்கன் பழைய கந்தர்வ உடலைப் பெற்று இராமன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

"இராமா! உனது திருவடி என்மீது பட்டதால், என் முன்வினைகள் எல்லாம் தீர்ந்து பிறவிக் கடல் கடந்தேன்" என்றான். "உனக்கு எப்படி இந்தக் கதி ஏற்பட்டு அரக்கனாக உருவெடுத்தாய்?" என இராமன் கேட்கவும் விராதன் சொல்லுகிறான் "பரம்பொருளே இராமா! நான் வானுலகில் குபேரனது ஆட்சிக்கு உட்பட்டவன். தும்புரு எனும் கந்தர்வனாக வாழ்ந்து கொண்டிருந்தேன். தேவலோகத்தில் அரம்பை எனும் பெண்ணிடம் காதல் கொண்டு அவளோடு கூடினேன். இதைக் கண்டு என்னை அரக்கனாகப் பிறக்கும்படி குபேரன் சாபமிட்டான். அழுது புரண்டு என் தவறுக்காக வருந்தி, எனக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப விமோசனம் வேண்டியபோது, குபேரன் "நீ இராமபிரான் காலடிபட்டு சாப விமோசனம் அடைவாய்" என்றான். ஆதிமூலமே! அன்று முதல் இன்று வரை அறிவற்ற நான் நன்மை, தீமை தெரியாமல் தீய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தேன். நின் பொற்பாதம் என்மேல் பட இன்று சாபம் நீங்கப் பெற்றேன்" என்றான் விராதன். "ஐயனே! இதுவரை நான் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்தருள்வாயாக!" என்று சொல்லி அந்த கந்தர்வன் வானுலகு சென்றான்.

பின்னர் அங்கிருந்து மூவரும் பயணப்பட்டு ஒரு சோலையை அடைகின்றனர். தண்டக வனத்திலே வாழ்ந்த முனிவர்களுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சி. அரக்கர்களின் தொல்லைகளால் அவதியுறும் அவர்களுக்கு இராமனின் வரவு மகிழ்ச்சியை அளித்தது. அனைவரும் ஒன்று சேர்ந்து இராமனிடம் சென்றனர். அவனது தோற்றத்தைக் கண்டு



மெய்ம்மறந்து நின்றனர். அந்த முனிவர்கள் அம்மூவரையும் அழகிய ஓர் ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றனர். இராமா! இனி நீங்கள் இங்கேயே தங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அன்று இரவு முனிவர்கள் அவரவர் இடம் சென்று தங்கிவிட்டு, மறுநாள் கூட்டமாக வந்து இராமனைத் தரிசித்தனர். "முனிவர்களே! உங்களுக்கு என்ன குறை?" என்று இராமன் வினவ, முனிவர்கள் "இராமா! தசரத குமாரா! எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்தைக் கேள்! இரக்கம் என்ற உணர்வு சிறிதும் இல்லாத அரக்கர்கள் இங்கே இருக்கிறார்கள். தர்மம் என்ற சொல்லுக்கே பொருள் தெரியாதவர்கள். அவர்கள் செய்கின்ற அநியாயங்கள் காரணமாக அறநெறி துறந்தோம்; தவச்செயல் நீத்தோம், கடும்புலி வாழும் காட்டில் வாழ்கின்ற மான்களைப் போல ஆனோம். எங்களுக்கு நற்கதி கிடைக்குமா?" "நாங்கள் தவவழி ஒழுகவில்லை; மறைகளை ஓதவில்லை; ஓதுவோர்க்கு உதவி செய்யவும் இல்லை; தீ வளர்த்து அக்னி ஹோமம் செய்யவில்லை; நெறிமுறைகளை நீத்தோம்;அந்தணர்களாக வாழ்வதையும் நீத்தோம்" "இந்திரனிடம் சென்று முறையிடலாமென்றால், அவனே அரக்கர்களுக்குப் பணிவிடை செய்பவனாக இருக்கிறான். பின்பு நாங்கள் யாரிடம் சென்று முறையிடுவது? நாங்கள் செய்த தவத்தின் பயன்தான் இப்போது நீ இங்கே வந்திருப்பது. நாங்கள் இருட்டில் வாழ்ந்து கொண்டி ருந்தோம், அருளுடைய இராமா! சூரியன் உதித்தது போல நீ வந்திருக்கிறாய். சூரிய ஒளியில் விலகும் இருளைப் போல எங்கள் துயரங்களும் நீங்க வேண்டும்" என்றனர். பத்து ஆண்டுகள் இவ்விடத்தில் இருந்து அவர்களின் துன்பங்களைக் களைந்த பின்னர் மூவரும் அகத்திய முனிவரைத் தரிசிக்கவென அவ்விடம் விட்டு நீங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவர்களின் வருகையை அறிந்த அகத்திய முனிவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அவர்களைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் சொரிய தமது ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த முனிவர்கள் தங்கள் கமண்டல நீரைத் தெளித்து மலர்களைத் தூவி வரவேற்றனர். இப்படி அனைவரும் அகத்தியரின் தவச்சாலையை அடைந் தனர். அங்கு முனிவர் இராமனை நன்கு உபசரிக்கிறார். இங்கேயே தங்கிவிடும்படி இராமனை அகத்திய முனிவர் வேண்டுகிறார். அப்போது இராமன் "முனிவர் பெருமானே! இந்தக் காட்டில் தீங்கு செய்து வாழுகின்ற அரக்கர்களை அழிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. இதற்கு ஆசி கூறித் தாங்கள் என்னை அனுப்ப வேண்டும்" என்றான். "இராமா! நல்ல காரியம் செய்யத் துணிந்தாய். உனக்கு வெற்றி உண்டாகட் டும்" என்று கூறி முன்பு திருமால் கையில் வைத்திருந்த வில்லையும் எடுக்க எடுக்கக் குறையாத அம்புகளைக் கொண்ட அம்பறாத்தூணியையும் இராமனிடம் கொடுத்தார். இந்தப் புவனம் முழுவதும் ஒரு தட்டிலும் மற்றொரு தட்டில் ஒரு வாளையும் வைத்துப் பார்க்கும் பொழுது, எடையும் சக்தியும் அதிகமாக இருக்கக் கூடியது இந்த வாள். இதனை யும் சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்து, திரிபுரங்களைச் சுட்டெரித்த வலிய அம்பையும் இராமனிடம் கொடுத்தார். பிறகு அகத்திய முனிவர் பஞ்சவடி எனுமிடத்தின் பெருமைகளையெல்லாம் கூறி, "அங்கு சென்று நீங்கள் வாழுங்கள்" என்று சொல்லி வழியனுப்பி வைத்தார். பின்னர் மூவரும் பஞ்சவடி நோக்கிப் பயணம் செய்தனர்.

வழியில் பல நதிகளையும், மலைகளைக் கடந்து சென்றனர். செல்லும் பாதையில் ஓங்கி உயர்ந்த மலையொன்றின் உச்சியில் உட்கார்ந்திருந்த கழுகுகளுக்கு அரசனான ஜடாயுவைக் கண்டனர். அதனருகே சென்றனர். ஜடாயுவும் இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். இவர்கள் தவ வேடத்தில் இருந்தாலும் தவசிகள் அல்லர், வில்லேந்திய கையினராக இருப்பதால் தேவர்களாக இருப்பார்களோ என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தான் ஜடாயு. அடடா! இவர்கள் தோற்றத்தைப் பார்த்தால் மூவுலகங்களையும் வெல்லக் கூடிய வலிமை படைத்தவர்களாகத் தோன்றுகிறார்கள். உடன் வரும் தேவியோ, தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைப் போலத் தோன்று கிறாள். இந்த வீரர்கள் யாராக இருக்கும் என்று யோசிக்கிறான் ஜடாயு. இவர்களைக் காணும்போது எனது நண்பன் தசரதச் சக்கரவர்த்தியின் நினைவு வருகிறதே. இப்படி ஜடாயு எண்ணிக் கொண்டிருக்கும்போதே அவர்கள் அருகில் வந்து விட்டனர். "வில்லேந்திய வீரர்களே! நீங்கள் யார் என்று எனக்குச் சொல்லலாமா?" என்றான் ஜடாயு அன்பு மேலிட. "உண்மை தவிர வேறு எதுவும் பேசத் தெரியாத இராமன் "ஐயா! நாங்கள் அயோத்தி வேந்தன் தசரதனின் குமாரர்கள்" என்றான். இப்படிச் சொன்னதும் ஜடாயுவுக்கு உவகை மேலிட்டது. கீழே குதித்துத் தன் இறகுகளால் அவ்விருவரையும் ஆரத் தழுவிக் கொண்டான். "என் நண்பன் தசரதன் சுகமாக இருக்கிறானா?" என்றான் ஜடாயு. "சத்தியத்தைக் காப்பதற்காக தசரதன் தன் ஊனுடம்பு நீங்கிப் புகழுடம்பு எய்தினான்" என்று இராமன் சொன்னதும் ஜடாயு மூர்ச்சித்து வீழ்ந்தான். உடனே இவர்கள் ஜடாயுவைத் தழுவி எடுத்தனர். கண்ணீர் விட்டுக் கதறினர். தன் உயிரினும் மேலான தசரதன் மாண்ட செய்தி கேட்டு ஜடாயுவும் வாய்விட்டு அரற்றினான். பின்னர் தசரதனுக்கும் தனக்கும் இருந்த ஆழ்ந்த நட்புப் பற்றிக் கூறினான்.

சம்பராசுர யுத்தத்தின்போது, நீ உடல்; நான் உயிர் என்று சொன்னானே! இன்று உடல் இங்கிருக்க உயிர் மட்டும் போய்விட்டதே என்று சொல்லி அழுதான். அவனோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தானும் தீயில் வீழ்ந்து மாண்டு போகாமல் வீணே புலம்புகிறேனே என்று வருந்தினான். பிறகு எழுந்து பேசுகிறான். "மைந்தர்களே! நான் அருணனின் புதல்வன். அவன் ஒளி படும் இடமெலாம் நானும் செல்வேன். தசரதனின் உயிர் நண்பன். ஆதி காலத்திலேயே வந்து பிறந்து விட்டேன். கழுகு அரசன் சம்பாதியின் தம்பி நான். ஜடாயு என்பது என் பெயர்" என்றான். இப்படி ஜடாயு பேசிக் கொண்டிருந்தபோது இராம, லக்ஷ்சுமணர்கள் கைகூப்பிய வண்ணம், கண்களில் நீர் சோர, அன்பின் மிகுதியால் இதயங்கள் கனக்க, நின்ற கோலத்தைக் கண்ட ஜடாயு, மாண்டு போன தசரதன் மீண்டும் வந்து தன்னெதிரில் நிற்பது போல எண்ணினான். இருவரையும் தன் சிறகுகளால் மீண்டும் அணைத்துக் கொண்டான். "மைந்தர்களே! ஈருடல் ஒருயிராய் இருந்த தசரதன் உயிர்போன பின்பு நான் உயிர் வாழ மாட்டேன். தீயில் பாய்ந்து உயிர் விடுவேன். உங்கள் தந்தைக்குச் செய்யும் ஈமக் கடன்களை நீங்களே எனக்கும் செய்வீர்களாக" என்றான். இதனைக் கேட்டு இராம லக்ஷ்சுமணர் கண்ணீர் சிந்தினர் "எங்கள் தந்தையும் இறந்து போனார். அவரது உயிருக்குயிரான தாங்களும் இறப்பேன் என்றால் எங்களுக்கு வேறு யார்தான் ஆதரவு?" "நாட்டையும் தாய் தந்தையரையும் அரச பதவியையும் எல்லா நலன்களையும் நீங்கி வனம் வந்து விட்ட எங்களை விட்டு நீயும் பிரிந்து போய்விட்டால் நாங்கள் என்ன செய்வோம்?". "அப்படியானால் சரி! மைந்தர்களே! நான் இப்போது சாக மாட்டேன். நீங்கள் அயோத்தி நகருக்குத் திரும்பும்வரை உயிரோடு இருப்பேன், சரிதானே?" என்றான் ஜடாயு. "அது சரி இராமா! தசரதச் சக்கரவர்த்தி இறந்து போனான் என்கிறாயே, அப்படியானால் நாட்டை ஆள வேண்டிய நீர் கானகம் வந்தது ஏன்? அதைச் சொல்" என்றான். "தேவர்கள், அசுரர்கள், நாகலோகத்தார் இவர்கள் எவரேனும் தீங்கிழைத்ததனால் காட்டுக்கு வந்திருந்தால் சொல்லுங்கள், அவர்களைக் கொன்று குவித்து விடுகிறேன். நாட்டையும் மீட்டுக் கொடுக்கிறேன்" இதைக் கேட்டதும் இராமன் இலக்குவனைப் பார்க்கிறான். குறிப்பறிந்து அவனும் நடந்த வரலாற்றை ஒன்று விடாமல் எடுத்துக் கூறுகிறான். தந்தையை சத்தியத்தைக் காக்கச் செய்து, தாய் கேட்ட இராஜ்ஜியத்தை தம்பிக்குக் கொடுத்துவிட்டு "கானகம் வந்த வள்ளலே" என்று சொல்லி ஜடாயு இராமனை உச்சி முகர்ந்தான்." இராமா! உனது வாய்மையால் உன் தந்தையையும் என்னையும் பெருமைப்பட வைத்தாய்" என்று சொல்லி, அகத்தியர் சொல்லியனுப்பிய இடத்திற்குச் சென்று அங்கு வாழுங்கள்" என்று சொன்னான். பிறகு அவர்கள் மூவரும் நடந்து செல்ல அவர்களுக்குக் குடை விரித்ததுபோலத் தன் சிறகை விரித்து மேலே பறந்து வந்தான். பின்னர் அவர்கள் ஓர் அழகிய சோலையை வந்தடைந்தனர். அவர்கள் வந்து சேர்ந்த இடத்தில் இலக்குவன் அருமையானதொரு குடில் அமைத்துத் தர, இராமனும் சீதையும் அந்தக் குடிலில் வாழ்ந்து வந்தனர்.

(தொடரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. பாலருக்கு ஒரு கதை

# கொக்கும் நரியும்



ஒரு காட்டில் பெரிய குளமொன்று இருந்தது. அக்குளக்கரையில் கொக்கு ஒன்று நடந்து வந்து கொண்டிருந்தது. இதனை அந்தக் காட்டு வழியால் வந்து கொண்டிருந்த நரி கண்டது.

அந்த நரிக்கு இந்தக் கொக்கை ஏமாற்றிப் பார்க்க வேண்டுமென்ற தீய எண்ணம் தோன்றியது. அது கொக்குக்கு அருகே சென்று,

"நண்பர் கொக்காரே! எனது வீட்டில் உமக்கு தேநீர் விருந்தளிக்க விரும்புகிறேன். நீர் வந்து அதில் கலந்து கொள்ள வேண்டுமென்றது" நரியின் வஞ்சகத்தை அறியாத கொக்கு அதற்கு உடன்பட்டு நரியின் வீட்டுக்குச் சென்றது.

அங்கே நரி ஒரு தட்டைப் பாத்திரம் நிறைய பாலினை வைத்து விட்டு கொக்காரே! "தட்டு நிறைய பால் இருக்கின்றது. அருந்துங்கள" என்றது.

கொக்கின் நீண்ட கழுத்தமைப்பும் அதன் சொண்டமைப்பும் தட்டைப் பாத்திரத்தில் இருந்த பாலை அருந்துவதற்கு ஏற்றது அல்ல.அதனால் கொக்கு அப்பாலை அருந்த முடியவில்லை.

நரி தன்னை ஏமாற்றி விட்டதை உணர்ந்த கொக்கு "நரியாரே, உமக்கு எனது வீட்டில் விருந்தளிக்க விரும்புகிறேன் வாரும்" எனக் கூறி நரியைத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றது.

அங்கே ஓர் உயரமான கூசா பாத்திரம் நிறைய பாலினை வைத்த கொக்கு நரியைப் பார்த்து "பாத்திரம் நிறையப் பால் வைத்திருக்கின்றேன். அருந்தும்" என்றது.

நரியின் உடலமைப்பு உயரமான பாத்திரத்திலிருக்கும் பாலை அருந்துவதற்கு ஏற்றதல்ல. அதனால் நரியால் அப்பாலை அருந்த முடியவில்லை.

தான் ஏமாற்றியதற்குப் பதிலாகக் கொக்கு தன்னை ஏமாற்றி விட்டது. என்பதை உணர்ந்த நரி வெட்கத்துடன் காட்டுக்குள் ஒரே ஓட்டமாக ஓடியது.

**பிறரை நாம் ஏமாற்ற நினைத்தால் இறுதியில் நாமே ஏமாற நேரிடும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. இலகுவழி ஆங்கிலம் [English]

01. காலை நேரம் - dawn/ in the morning/ morning time
02. சேவல் கூவும் - rooster Cocks
03. பறவைகள் பாடும் - birds sing
04. ஆலய மணியோசை கேட்கும் - Temple bell rings
05. பூக்கள் மலரும் - Flowers bloom
06. சூரியன் உதிக்கும் - Sun rises
07. அம்மா காலை உணவு செய்வார் - Mother prepares breakfast
08. சந்தையில் மக்கள் கூடுவர் - people gather in the market
09. அப்பா வேலைக்குச் செல்வார் - Father goes to work
10. மாணவர்கள் பாடசாலை செல்வார்கள் - pupils go to school

ஆக்கம்: சு.சிவராசா (பகுதிநேர ஆங்கில ஆசிரியர்)

## 04. மருத்துவம்
### மாரடைப்புப் பற்றித் தெரிந்து கொள்வோம்.




இன்று உலகம் உள்ளங்கைக்குள் வந்துவிட்டது. ஒரு ஸ்மார்ட் ஃபோன் இருந்தாலே போதும். உலகின் எந்த மூலையிலிருக்கும் எந்தவொரு பொருளையும் வாங்கி விட முடியும். விரும்பிய பொருளை மட்டுமல்ல, உணவையும் கூட இருக்கும் இடத்துக்கே வரவழைத்து விட முடியும். நவீன யுகம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் பல படிகள் முன்னேறிவிட்டது. பல வேலைகளை உட்கார்ந்த இடத்திலேயே முடித்துக் கொள்கிறோம். எல்லாவற்றுக்கும் மொபைல் போனையே நாடுகின்றோம்.

இதன் விளைவு யாதெனில், நடைப் பயிற்சி குறைந்து விட்டது. பக்கத்துத் தெருவில் உள்ளவரைக்கூட நடந்து சென்று பார்த்து, பேசுகிற வழக்கத்தைக் குறைத்து விட்டோம். உணர்வுகள் எதுவாயினும் அதைச் சமூக ஊடகங்களில் பகிர்ந்துகொண்டு, ஒதுங்கி நிற்கின்றோம். இதன் விளைவாக உடற்பருமன், அதீத உணர்வுகள், மனவெழுச்சி போன்றவற்றுக்குள் சிக்கிக் கொள்கின்றோம். முன்னோர்கள் வகுத்துக் கொடுத்த வாழ்க்கை முறையைத் தொலைத்து விட்டோம். இதனால் பல நோய்கள் தாக்கும் அபாயத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ளோம். அவற்றில் ஒன்றுதான் மாரடைப்பு!

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் 70, 80 வயதுக்காரர்களுக்குத்தான் மாரடைப்பு வந்தது. அது 60 ஆகக் குறைந்து, 40 ஆகக் குறைந்து தற்போது 20 - 25 வயதுள்ள ஆண், பெண் இருபாலாருக்குமே மாரடைப்பு ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதலில் மாரடைப்பு என்றால் என்ன என்று பார்ப்போம். உடலில் எந்த பாகமும் உயிர்ப்போடு இருக்க வேண்டுமென்றால் அதற்குப் போதுமான இரத்தம் தேவை. உடம்பில் உள்ள அனைத்துப் பாகங்களும் இரத்தத்தினால்தான் உயிர் வாழ்கின்றன. உடல் முழுவதற்கும் இரத்தத்தை அனுப்புவது இதயம்தான். ஆனால் இதய தசைகளுக்கும் இரத்தம் தேவைப்படுகிறது. அந்த இதயத் தசைகளுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்வதற்காகவே சில இரத்தக் குழாய்கள் இருக்கிறன. இரத்தம் கொண்டு வரும் இரத்தக் குழாய்களை நாம் தமனி எனக் கூறுவோம். இந்த தமனி இரத்தக் குழாய்தான் உடல் முழுக்க இரத்தத்தைக் கொண்டு செல்கிறது. இந்த இதயத்துக்கு இரத்தத்தைக் கொண்டுவரும் தமனி அடைபடுவதால் உண்டாவதுதான் "ஹார்ட் அட்டாக்" அதாவது மாரடைப்பு. இருதயம் துடிக்கும்போது, இருதயத்தின் மேல் உள்ள அந்த மகா தமனி மூலமாய் இரத்தம் உடல் முழுவதும் பாய்கிறது. இந்த மகா தமனி யில் இருந்தே இரண்டு குழாய்கள் இருதயத்துக்கு வருகிறது. ஒன்று வலது பக்கத்திலும் மற்றொன்று இடது பக்கத்திலும் வருகிறது. இடது பக்கத்தில் வரும் அந்த இரத்தக் குழாய் இரண்டாகப் பிரிகிறது ஒன்று முன்புறமும், மற்றொன்று பின்புறமும் வருகிறது. இந்த மூன்றும்தான் இதயத்துக்கு இரத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இப்போது இந்த இரத்தக் குழாயின் இறுதிப் பாகம் பாதிக்கப்பட்டால், அந்த இரத்தக் குழாயைச் சுற்றியுள்ள பாகங்களுக்கு இரத்தம் பரவாது. அதனால் அந்தத் தசைகள் பாதிக்கப்படும். இதுவே இரத்தக் குழாய் நடுவில் பாதிக்கப்பட்டால் அந்த இரத்தக் குழாயைச் சுற்றி உள்ள பெரிய அளவிலான தசைகள் பாதிக்கப்படும். இதுவே அந்த இரத்தக் குழாய் தொடக்கத்திலேயே அடைபடுமானால், அந்த இரத்தக் குழாயைச் சுற்றியுள்ள முழுமையான தசைகளும் பாதிக்கப்படும். இதன்மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் இரத்தக் குழாய் அடைப்பு இடத்தைப் பொறுத்து இந்த பாதிப்பானது மாறுபடும் என்பது தான்.

ஒரு தமனியின் இறுதியில் அடைப்பு ஏற்படுமானால், அப்போது பாதிப்புக் குறைவாக இருக்கும். அதுவே ஆரம்பத்தில் அடைபடுமானால் பாதிப்பு அதிகமாக இருக்கும். இன்னும் சில பேருக்கு இத்தமனிகளை சுற்றியுள்ள அதன் கிளைகளில் அடைப்பு ஏற்படும். அப்படி கிளைகளில் அடைப்பு ஏற்படும்போது அந்தக் கிளைகளைச் சுற்றியுள்ள தசைகள் மட்டுமே பாதிக்கப்படும். எந்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுகிறது; அந்தக் குழாய் எந்த அளவிலான தசைகளுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்கிறது என்பதைப் பொறுத்துத் தான் நாம் சிறிய அளவிலான அடைப்பு அல்லது பெரிய அளவிலான மாரடைப்பு என்று கூறுகிறோம். இரத்தக் குழாயின் இறுதி இடங்களில், அடைப்பு இருந்தால் ஒருவர் எளிதில் பிழைத்துக் கொள்வார். ஆனால், அந்தத் தசைகள் மட்டும் செயலிழந்து போகும். அவருக்கு அதிக வலியைக் கொடுக்கும். இதற்கு நாம் மாற்று மருந்து கொடுக்கும்போது அவர் உடல் நலம் தேறி விடுவார். இதுவே இரத்தக் குழாயின் ஆரம்ப இடத்தில் அடைப்பு ஏற்பட்டிருக்குமாயின், அவர் இறக்கும் வாய்ப்பு அதிகம். பெரியளவிலான தசைகள் பாதிக்கப்பட்டதால், அவர் வாழ்நாள் முழுக்க மாத்திரை மருந்துகளை உட்கொள்ள வேண்டிவரும். எனவே நாம் சுருக்கமாகப் புரிந்து கொள்ள வேண்டியது இதைத்தான். மாரடைப்பு என்பது இதயத்தில் உள்ள இரத்தக் குழாய்களில் அடைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுவதால் வருவது. அது எந்த இடத்தில் அடைப்பு ஏற்படுகிறது என்பதைப் பொறுத்து மாரடைப்பின் தன்மையானது மாறுபடும்.

அடுத்து மாரடைப்பு ஏற்படுவதற்கான காரணங்களாக உடல் பருமன், உடற்பயிற்சி இன்மை, உயர் இரத்த அழுத்தம், மன அழுத்தம், கொழுப்பு (கெட்ட கொழுப்பு எனப்படும் எல்.டி.எல் அளவு அதிகரிப்பது இரத்தக் குழாய்களை குறுகச் செய்கிறது. இதனுடன் டிரை கிளசரைட் அளவு அதிகரிப்பது மாரடைப்புக்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. எனவே, எல்.டி.எல் கொழுப்பைக் குறைத்து, எச்.டி.எல் எனப்படும் நல்ல கொழுப்புள்ள உணவை எடுத்துக் கொள்ள வேண்டும்) சர்க்கரை நோய் (சர்க்கரை நோய் கட்டுக்குள் இல்லாதவர்களுக்கும் மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு அதிகம். இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிக்கும்போது அது இரத்த நாளங்களின் சுவர்களில் விரிசல் உள்ளிட்ட பாதிப்பை ஏற்படுத்தி வீக்கத்தை ஏற்படுத்துகிறது. இதில் இன்னொரு பிரச் சினை என்ன என்றால், சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு மாரடைப்பின் அறிகுறிகள் தெரியாமல் போக வாய்ப்புண்டு. எனவே, சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்க வேண்டும்) மற்றும் வயது, புகைப் பழக்கம், சரியான தூக்கமின்மை, குடும்ப மரபியல் தொடர்பு எனப் பல காரணங்கள் உள்ளன. ஆண்டுக்கு ஒரு முறையாவது எளிய மருத்துவ பரிசோதனை செய்துகொள்வதன்மூலம் மாரடைப்பு வருவதற்கான வாய்ப்புக்களைக் கண்டறியலாம். பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஐந்து வருட இடைவெளியில் பிளட் சுகர், கொலஸ்ட்ரால், எக்ஸ்ரே, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகளைச் செய்வதனூடாக மாரடைப்பு அறிகுறிகள் உண்டா? என்பதை அறிந்து கொள்ளலாம்.

தொடரும்.....

## 05. பலன் சொல்லும் ஜோதிடம்

### ❖ சனீஸ்வர மாற்றம் உங்களுக்கு எப்படி?

- 26.12.2020 தொடக்கம் இரண்டரை ஆண்டுகள் சனீஸ்வர மாற்றப் பலாபலன்கள்
- 15.11.2020 தொடக்கம் ஒரு வருடம் வரை வியாழ மாற்றப் பலன்கள்
- 02.09.2020தொடக்கம் ஒன்றரை ஆண்டுகளுக்கு இராகு,கேது மாற்ற பலன்கள்.

**மேடம்**

**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

வாக்கிய பஞ்சாங்கப்படி 26.12.2020 தொடக்கம் சனீஸ்வரன் இரண்டரை ஆண்டுக ளுக்கு 10ஆம் இடத்தில் கோசார நிலைப்படி நின்று பலாபலன்களைப் புரிவார். குரு பகவான் நவம்பர் 15 தொடக்கம் ஒரு ஆண்டுக்குப் பத்திலும் இராகு,கேது முறையே 02.09.2020 தொடக்கம் ஒன்றரை ஆண்டுகளுக்கு இராகு இரண்டாம் நிலையிலும் கேது எட்டாம் கோசரத்திலும் இருந்து பலன்களைப் புரிவார்கள்.

பத்திலே சனி வருகின்றார் செய்யுந் தொழிலை உயிரினும் மேலாகப் பேணிப் பாதுகாருங்கள். இடைத்தங்கல் நாடுகளில் அஞ்ஞாத வாசம் புரிவோர் திரும்பவும் தாய் நாட்டுக்கு வந்து சேர முயற்சி எடுப்பார்கள். பொறுப்பில்லாமல் பணம், நகை என்பவற் றைக் கொடுக்க வேண்டாம். சிலர் எதிர்பாராதபடி நோயில் வீழ்ந்து விடல், தொழிலில் மாற்றம் ஏற்படல், சொத்துப் பிரச்சினை தீர்க்க நீதிமன்றத்தை நாடுதல், குழந்தைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியத்திற்காக வைத்திய வசதிகளை நாட முற்படல், சிலருக்கு இதயம் தொழிற்பட மின்கலம் பொருத்த வேண்டி நேரிடும். மணவிலக்குப் பெற்ற கடிதம் வரச் சுணங்கியமையை எண்ணி வருந்துதல், எடுக்கின்ற முயற்சிகளில் தடை, தாமதங்கள், குறுக்கீடுகள் ஏற்படல். சனீஸ்வர விரத வழிபாட்டுடன் ஆஞ்சநேயருக்கும் சனிக்கிழமைகளில் வெற்றிலை மாலை சூட்டி வணங்கிவர காரியங்களில் வெற்றியைக் காணலாம். பிதாவுடன் பிள்ளைகள் மாறுபட்ட மனப் போக்கினைக் கொண்டிருத்தல். மிதிபலகைப் பிரயாணத்தைத் தவிர்க்கவும் பரீட்சையில் வெற்றி வாகை சூடினாலும் உத்தியோகம் கிடைக்க விடாது. ஆவணங்களில் பிழையான தகவல்கள் இருத்தல். பிதாவின் கருணையால் சொத்துப் பங்கீடு பாரபட்சமின்றிப் பகிரப்படல்.

### ❖ இடபம்

**கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

வாக்கிய பஞ்சாங்கப்படி சனீஸ்வரன் 26.12.2020 தொடக்கம் இரண்டரை ஆண்டுகளுக்கு கோசார நிலைப்படி ஒன்பதாம் நிலைப்பாட்டிலும் வியாழன் நவம்பர் 15ஆம் திகதி 2020 தொடக்கம் ஒன்பதாம் நிலையிலும் சர்ப்பக் கிரகங்களான இராகு, கேது முறையே 02.09.2020 தொடக்கம் ஒன்றரை வருடத்திற்கு இராகு ஜென்மத்திலும் கேது ஏழாம் ஸ்தானத்திலும் வீற்றிருந்து உங்கள் வாழ்க்கைப் போக்கினை நடாத்திச் செல்வார்கள்.

சனீஸ்வரன் 09ம் நிலைக்கு வருகின்றார். சிலர் பிதாவினை இழக்கவும், விட்டுப் பிரியவும் நேரிடலாம். பாக்கியஸ்தானத்தில் காகமேறும் தம்பிரான் இருப்பதினால் செய்கின்ற முயற்சிகளில் இலாபமும் முன்னேற்றமும் ஏற்படும். சகோதரர்களின் கிருபையினால் வாகன யோகமும் புதிய மனை அமைக்கப் பண உதவியும் கிட்டிவிடும். சிலர் செய் தொழிலில் பல வடிவங்களில் பிரச்சினைகளை எதிர்நோக்கலாம். காணாமல் போனவர் உயிருடன் என்ற தகவல் செவிகள் குளிரக் கிட்டும். சிலரில் நம்பிக்கை வைப்பதைவிட அவரை விட்டு ஒதுங்கி இருப்பதே சிறப்பைத் தரும். பிரயாண வேளையில் அருகில் இருப்பவரில் ஒரு கண் வைத்திருங்கள். வாஸ்து சோதிட விதிவிளக்கப்படி புதியமனை கட்டினால் வளமான வாழ்வினை அனுபவிக்கலாம். கோசார நிலைப்படி சனி, குரு, ராகு, கேது மற்றும் ஏனைய கிரகங்களின் நிலைப் பாட்டையும் நடப்பு மகாதிசா புத்திப் பலன்களையும் மதிப்பெடுத்து புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டையாவது போன்று செய்தொழிலில் கூடிய கவனம் எடுங்கள். ஜாதகத்தில் எட்டாம் வீட்டில் பகை அல்லது நீசமடைந்த சனீஸ்வரன் இருப்பின் திருமண வாழ்வில் பிரச்சினைகள் தலை தூக்கிய வண்ணம் இருக்கும். இலட்சியமின்றி நடமாடும் பிள்ளைகளை எண்ணிப் பெற்றோர் கலக்கமடைதல். சனி திசை நடந்து கொண்டிருப்பின் கல்வியில் விசேட கவனம் எடுக்கவும்.

### ❖ மிதுனம்

**மிருகசீரிடம் 3,4, திருவாதிரை , புனர்பூசம் 1,2,3**

வாக்கிய பஞ்சாங்கப்படி சனீஸ்வரன் 26.12.2020 தொடக்கம் இரண்ரரை ஆண்டுகளுக்கு அட்டமத்துச் சனியாகவும் குருபகவான் 15.11.2020 தொடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடமொன்றிற்கு அட்டமத்துக் குருவாகவும் காட்சியளிப்பார். பாம்புக் கிரகங்களான ராகுவும் கேதுவும் 2.09.2020 தொடக்கம் ஒன்றரை ஆண்டுகளுக்கு இராகு பெருமான் மூன்றாம் கோசாரத்தில் நின்றுலாவ, கேதுவோ சட்டக் கேதுவாக 6ஆம் இடத்திலும் நின்று தன் துணிச்சலான பலன்களைக் காட்டிய வண்ணம் இருப்பார்.

அட்டமத்துச் சனியால் வாழ்க்கை முன்னேற்றமடையாமல் தொட்டதெல்லாம் தோல்வியைத் தழுவும் நிலையில் இருக்கும். சனீஸ்வரனின் கெடுதல்களினின்றும் விடுபட சனி விரத வழிபாட்டுடன் ஆஞ்சநேயரையும் வழிபட்டு வாருங்கள். பிறர் நம்ப நடவுங்கள். ஆனால் நம்பி நடக்க வேண்டாம். பொறுப்பில்லாமல் பணம், நகை, மற்றும் ஏனைய பொருட்களைக் கொடுத்து ஏமாற்றமடைய வேண்டாம். உயிரை எடுக்கும் கண்டங்கள் தேடி வரலாம். உங்கள் ஜாதகத்தில் தற்போது நடைபெறும் மகாதெசை புத்தி ஆரோக்கிய நிலையில் இருப்பின் 8ஆம் வீட்டுச் சனியால் ஏற்படும் கெடுதல்கள் குறைந்து விடும். தெய்வ நம்பிக்கையைக் கைவிட வேண்டாம். சிறுவர்களைக் கடத்தி கப்பம் கோருவோர் பற்றி விழிப்பாக இருக்கவும். நோயினால் இளைப்பாற விண்ணப்பம் கொடுத்தல். கணவனின் நடத்தைப் போக்கில் ஏற்படும் மாற்றத்தினால் மனைவி பிரிந்து செல்ல காரியத்தில் இறங்குதல். அதிரடி முடிவுகள் எடுப்பதன்மூலம் வியாபாரத்தில் கொடி கட்டிப் பறக்கலாம். இறந்தவர்களின் ஆண்டுத் திதிகளைக் கொண்டாடாது விடின் மனையில் அசுத்த ஆவிகளின் நடமாட்டம் ஏற்பட்டு தரித்திரம் நோய், பிணிகளால் அவதிப்பட நேரிடும். நன்கு விசாரணை செய்த பின்னரே மணமக்களைத் தெரிவு செய்யவும். பெண்களின் கைரேகையில் வெள்ளி மேட்டில் கறுப்பு மச்சம் காணப்படின் கற்பு நெறியுடன் ஒழுக்கமும் பாதிக்கப்படலாம். புதியவர்களின் அறிமுகம் ஏற்படும் பட்சத்தில் முளையிலேயே கிள்ளி விடுங்கள். இதய அடைப்பினை நீக்க, சத்திர சிகிச்சை செய்ய நாள் குறிக்கப்படலாம்.

### ❖ கற்கடகம்

**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

தமிழ் பேசும் நல்லுலக வாசகர்களினால் பெரிதும் விரும்பும் வாக்கிய பஞ்சாங்கப்படி சனீஸ்வரன் இரண்டரை ஆண்டுகளுக்கு 26.12.2020 தொடக்கம் ஏழாம் நிலையில் நின்று நன்மையான பலன்கள் மட்டுமல்லாமல் இடைக்கிடையே மனம் வருந்தக்கூடிய தீமையான நிலைப்பாடுகளையும் கொடுத்த வண்ணம் இருக்கின்ற வேளையில் தெய்வச் செயலாக உங்களை ஆறுதல் நிலைக்கு கொண்டு வர 15.11.2020 தொடக்கம் ஒரு வருடம் வரை வியாழ பகவான் 7ஆம் நிலையில் நின்று மலைபோல் வருஞ் சோதனைகளைத் தகர்த்தெறிந்து விடுவார். பாம்பென்றால் படையும் நடுங்கும் சர்ப்ப தேவதைகளான இராகுவும்; கேதுவும் முறையே 02.09.2020 தொடக்கம் ஒன்றரை வருடத்திற்கு ராகு லாபத்தை அள்ளித் தரும். 11ஆம் இடத்திலும், கேது வெற்றித் திருமகனாக்கும். 05ஆம் கோசாரத்திலும் நின்று சனீஸ்வரனால் ஏற்படும் துன்பங்களைப் போக்கி விடுவார்கள்.

திருமணப் பேச்சுவார்த்தை சாதகமான நிலைக்கு வரும். வெளிநாட்டு மணமகனை ஆரம்பத்தில் பேசியிருந்தாலும் கொரேனா வைரஸ் காரணமாக உள்நாட்டிலேயே மணமகனைத் தெரிவு செய்தல். இடைத்தங்கல் நாட்டில் சிக்கியிருந்தோர் தாம் எண்ணி யிருந்த நாடுகளுக்குச் செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல். கண்டகச் சனீஸ்வரன் கழுத்தறுக்க வருகின்றார் எனக் கலங்கிக் குழப்பமடைய வேண்டாம். பிரிவுத் துயரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்த முயன்றாலும் ஈற்றில் நன்மையே கிட்டி விடும். பயணங்கள் ஆரம்பத்தில் தடை, தாமதங்களைக் கொடுத்தாலும் முயல் வேகத்தில் வெற்றி கிடைக்கும். சொத்துப் பிரச்சினையால் குடும்பத்தில் விரிசல்கள் தாண்டவமாடினாலும் நீதிமன்றத் தீர்ப்பு சாதகமான முடிவினைத் தந்து விடலாம். தம்பதியர் மற்றும் சிநேகிதர் உறவினர்கள் மத்தியில் கருத்து மோதல்கள் ஏற்பட்டுப் பின் சுமுக நிலைக்கு வந்து விடலாம். விடைத்தாள்களைத் திருத்த முற்படுகையில் மதுபானப் பாவனை புள்ளிகளைப் பாதிக்கும். தென்புலத்தாருக்குச் செய்யும் சடங்கினால் துன்ப துயரங்கள் விலகிப் போய் விடலாம். பழைய ஜாதகங்களில் பிழைகள் இருப்பதினால் சரியாகக் கணித்துப் பலனை அறியுங்கள்.

❖ **சிங்கம்**

**மகம். பூரம், உத்திரம் 01**

வாக்கிய பஞ்சாங்கப்படி சனீஸ்வரன் 26.12.2020 தொடக்கம் சத்துருக்களை விரட்டியடித்துக் கலைத்துவிடும் கோசார நிலை 06ஆம் இடத்தில் இரண்டரை ஆண்டு களுக்கு நிற்பார். சனீஸ்வரன் மாற்றம் பெரும்பாலும் 3.6.11 ம் நிலையில் நிற்கும் போது நன்மைப் பலன்களை வழங்கிய வண்ணமிருப்பார். விச்சிரமா முனிவரை விலங்கிலே மாட்ட வைத்த 6இல் வியாழன் 15.11.2020 தொடக்கம் ஒரு வருடம் வரை உங்களுக்கு எந்த விதத்தில் கெடுதலை ஏற்படுத்தலாம் எனக் காத்திருப்பார். இராகு, கேது முறையே 02.09.2020 தொடக்கம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முறையே இராகு 10ஆம் நிலையிலும் கேது 04ஆம் கோசரத்திலும் நின்று அலைச்சலையும் நிம்மதி இல்லாத வாழ்க்கையையும் அனுபவிக்கச் செய்து விடுவார்கள்.

சனீஸ்வரன் 06ஆம்இடத்தில் நிற்குங் காலத்தில் உங்களை நாடி வரும் எதிர்ப்புக்கள் அடங்கி விடும். நாட்பட்ட நோய்கள் குணமடைந்து விடும். திருடர் தொல்லைகள் நீங்கி பறி கொடுத்த பொருட்கள் வந்து சேரும். நாகதோஷம், கால சர்ப்பதோஷம், குருசண்டாள தோஷமுடையவர்கள் கல்வி, விவாகம், தொழில் என்பவற்றால் பாதிப்படையா வண் ணம் முன்னேற்றங்கள் காண்பதற்கு வீட்டில் சாமி அறையில் நாக விளக்கினை வைத்து வழிபடவும். நிலுவை கூடியதால் தொலைபேசி மற்றும் மின்சார இணைப்புக்கள் தற் காலிகமாகத் துண்டிக்கப்படலாம். சிலர் நட்ட நிலைப்பாடு முன்னிட்டு செய்தொழிலைக் கைவிட வேண்டி நேரிடலாம். பழைய பொருட்களுக்கு வர்ணந் தீட்டி புதிதுபோல் காட்டி விற்பனை செய்ய முயற்சிப்பார்கள். பங்குத் தொழிலில் சேர விரும்புதல், பணமின்மை யால் விவாகம் தடைப்பட்டுப் போகலாம். வியாபாரப் போட்டியால் தகராறுகள் முளைத்தல், பிள்ளைகள் ஏற்படுத்தும் தவறுகளை பவ்வியமான முறையில் கண்டித்து திருத்தவும். அநாவசியமாக பிறர் விடயங்களில் தலையிட்டு அவமானப்பட வேண்டிய நிலைக்கு ஆளாகலாம். கொடுத்த கடனைப் பெறத் தனித்துச் செல்ல வேண் டாம். தம்பதியர் மத்தியில் கூடா ஒழுக்கம் முன்னிட்டு சந்தேகமேற்பட்டு பிரிவினைக்கு வழியேற்படுத்தலாம். நோய் குணமடைய தெய்வ தலங்களுக்கு விஜயம் செய்தல்.

❖ **கன்னி**

**உத்திரம்2,3,4, அத்தம், சித்திரை 1,2**

வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பீட்டின் பிரகாரம் சனீஸ்வரன் 26.12.2020 தொடக்கம் இரண்டரை ஆண்டுகளுக்கு 5இல் சனி நஞ்சுச் சனியாக உலாவப் போகின்றார். குரு பக வானும் 15.11.2020 தொடக்கம் தெய்வச் செயலாக 5ஆம் இடத்தில் நிற்பதினால் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணுக்கு வருந் துன்பம் கண் புருவத்துடன் போய் விடும். நாகக் கிரகங்களான இராகு, கேது என்பன 02.09.2020 தொடக்கம் ஒன்றரை ஆண்டுக்கு இராகு கன்னியில் 09ம் இடத்திலும் கேது மூன்றாம் ஸ்தானத்திலும் வீற்றிருந்து தங்கள் திருவிளையாடல் களைத் தொடங்குவார்கள்.

ஐந்தாம் வீட்டுக்கு வருகை தரும் சனீஸ்வரன் நீங்கள் தொடுக்கும் முயற்சிகளைக் கெடுத்து மனவருத்தத்தை ஏற்படுத்தலாம். தெய்வச் செயலாக நடக்கும் திசாபுத்திப் பலன் கள் நன்றாக இருப்பின் சனீஸ்வரனின் தீய பலன்கள் குறைந்து விடும். பிள்ளைகளின் செய்கைகளினால் குடும்ப மானம் கப்பல் ஏறிவிடும். கொடுத்த கடனை வாங்க முடியாது காவல் துறையை நாடவேண்டி நேரிடும். வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு முகவரின் திருவிளையாடலால் நட்டாற்றில் இறக்கிவிடப்படலாம். குழந்தைப் பலன் ஏற் படாது தம்பதிகளை வருத்தமடையச் செய்யும். செயற்கை முறையில் பிள்ளைப் பாக் கியம் பெற மருத்துவ வசதிக்காக தென்னிந்திய மருத்துவமனைக்குச் செல்ல முடி வெடுத்தல், புதிய பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டி நேரிடும் பொழுது காலா வதித் திகதி நம்பகத் தன்மையில் மிகமிக விழிப்பாக இருங்கள். பெற்றோர் விடுகின்ற தவறுகளினால் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படலாம். கீரைக் கடைக்கும் எதிர் கடை உருவாகலாம். சாதி, மத பேதம் பாராது கன்னியர்கள் குடும்பத்தைத் துறந்து தான் விரும்பியவனுடன் இரவில் ஓடி விடலாம். மருத்துவரின் சிபார்சின்றி மருந்து வில்லை களைப் பாவிக்க முயல்வதால் தேகநலம் பாதிக்கப்படலாம். ஜாதகத்தில் எட்டாம் இடத்தில் சந்திரன் இருப்பின் நீர்க் கண்டத்தில் கவனமெடுங்கள். ஊஞ்சல் கயிறு இயமனாக சிறு பிள்ளைகளுக்கு வந்து விடலாம். திருமணத்திற்காக வெளிநாடுளில் இருந்து மணமக்கள் தாயகம் வந்து சேரலாம். பிதாவின் தேகநலம் பாதிப்படையலாம்.

ஜோதிடர் V.A.சிவராசா B.A.

(அரச விருது பெற்ற ஜோதிடர், சாமசிறி தேச மானிய விருது, ஜோதிர், வித்தியா ரத்னா விருது, M.G.R நூற்றாண்டு விழா விருது)

## 06. மாணவர்களுக்கு ஒரு கட்டுரை

### கல்வி என்றால் என்ன?

அது புத்தகங்களைப் படிப்பதா? இல்லை. அப்படியானால் பல்வேறு விடயங்களைப் பற்றி அறவதா? அதுவுமில்லை. எத்தகைய பயிற்சிகளின்மூலம் மன உறுதியின் வேகமும் அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்குட்பட்டுப் பயன் தரும் வகையில் அமைகின்றதோ அந்தப் பயிற்சி தான் கல்வி என்கின்றார் சுவாமி விவேகானந்தர்.

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையினை வளர்க் கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் கால்களில் நிற்கும்படி செய்யுமோ அது தான் உண்மையான கல்வி ஆகும்.

கல்வி, அறிவு வளர்ச்சிக்கு அவசியமானது. நாம் மனதை ஒருமுகப்படுத்திக் கற்க வேண்டும். கவனம் சிதறாது ஏனைய சிந்தனைகள் இல்லாது குறித்த ஒரு விடயத்தில் தொடச்சியாக மனதை ஈடுபட வைக்கும் ஆற்றலினையே மன ஒருமைப்பாடு என்கின்ற னர். எனவே நாம் கற்கும்போது மன ஒருமைப்பாட்டுடன் கற்க வேண்டும்.

கடவுளைத் தொழுவது ஆகட்டும், பணம் சம்பாதிப்பதில் ஆகட்டும், சமையலில் ஆகட்டும், கல்வி கற்பதில் ஆகட்டும் மன ஒருமைப்பாடு அதிகமாக இருக்கும் வரை அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக நடைபெறும். எத்துறையில் வெற்றி பெறுவதாயினும் அது மன ஒருமைப் பாட்டில் தான் தங்கியுள்ளது. எனவே மனதை ஒரு நிலைப்படுத்திக் கற்றால் அது நிச்சயம் எமக்கு வெற்றியினைத் தரும்.

ஒரு மனிதனுக்கு அழகு கல்விதான். இதுவே நாலடியாரில் "கல்வி அழகே அழகு" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஔவையார் "கற்றவனுக்குச் சென்ற இடமெல் லாம் சிறப்பு" என்கின்றார். எனவே எமக்கு அழகையும் சிறப்பையும் தருவது கல்விதான்.

எமது முகத்தில் உள்ள அழகிய இரு விழிகள் இந்த உலகின் அழகை இரசிக்க உதவ லாம். ஆனால் உண்மையான கண்கள் எனப்படுவது கல்விதான். இதனால்தான் கல்விக் கண்ணைத் திறக்க வேண்டும் என்கின்றார் திருவள்ளுவர்.

" எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

எனவும். ஔவையார் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" எனவும் கூறியுள் ளனர். ஒருவனுக்கு எண்ணாகிய கணிதமும் மொழியாகிய எழுத்துமே கண்கள் என்கின்றனர்.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்பார்கள். நாம் கற்றவை எமது கைக்குள் அடங்கும் சிறு மண்ணளவே. அதனால் இன்னும் கற்க வேண்டி உள்ளதோ இந்த பரந்து கிடக்கும் உலகத்தின் அளவானது. முழுமையாக எல்லாவற்றையும் கற்று முடிக்க எமது வாழ்நாள் போதாது. எனவே எமது வாழ்நாளில் சிறிதளவேனும் அதனைச் சாத்தியமாக்குவதற்கு நாம் வாழும் காலத்தில் பொன்னான நேரத்தை வீணாக்காது கற்றால், அது எமது அறிவுக் கண்களைத் திறக்கும். அந்த அறிவுக் கண்ணால் இந்த உலகத்தைப் பார்க்கும்போது தான் பல உண்மைகள் தெரியும்; உலகமும் உங்களைப் பார்க்கும்.

கல்வியானது கற்கக் கற்க வளர்ந்து செல்லும். எனவே ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு விடயத்தைக் கற்றுப் பயன் பெறுதல் நன்று."ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண டாம்" என்கின்றார் ஔவையார். மேலும் "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந் தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு" என்கின்ற குறட்பா மூலம் மணலைத் தோண்டத் தோண்ட நீர் ஊறும். அது போல் கற்கக் கற்க அறிவு பெருகும் என்கின்றார் வள்ளுவர்.

இத்தகைய கல்வியை நாம் கற்பது மட்டுமன்றி, இன்னொருவருக்குக் கற்பித்துக் கொடுப்பதும் சிறப்புடையதே.

"இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவிலும் புண்ணியம் கோடி
அங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்" என்ற பாடல் மூலம் பாரதியார் கோடி புண்ணியம் தரவல்லது ஏழை ஒருவனுக்கு கல்வி அளிப்பது என்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி விலை கொடுத்து வாங்க முடியாத ஒரு அழியாச் செல்வம் ஆகும். இச்செல்வத்தினை ஏழை, பணக்காரர், ஊனமுற்றோர் என்ற பாகுபாடின்றி அனைவரும் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு எவராலும் அபகரிக்க முடியாததும் அழிக்க முடியாததும் கல்விச்செல்வம் ஒன்றே ஆகும். வறுமையில் இருந்த பலர் விஞ்ஞானிகளாகவும் அறிஞர்களாகவும் இந்த உலகம் போற்றும் அளவிற்கு வந்துள்ளனர் என்றால் அவர்கள் முயற்சித்துப் பெற்ற கல்வியினாலேயே அது சாத்தியமாகி இருக்கின்றது எனலாம். "கற்கையில் கல்வி கசப்பு கற்றபின் அதுவே சிறப்பு" என்பார்கள். கசப்பான கல்வியினை நாம் கற்றால் அது எம் வாழ்நாள் முழுவதற்கும் சிறப்பைத் தரும்.

அன்னம், பாலினையும் நீரையும் கலந்து வைத்தால், நீரை அகற்றி விட்டுப் பாலினை மட்டுமே உண்ணும். அது போல் மாணவர்களும் கற்கும்போது நல்ல விடயங்களை மட்டுமே தேர்ந்தெடுத்து மனதில் பதித்தல் வேண்டும். புத்தகங்கள் கூட சில சுவைக்கப்பட வேண்டியவை, சில விழுங்கப்பட வேண்டியவை, மிகச் சிலவே சப்பி ஜீரணிக்கப்பட வேண்டியவை என்கின்றார் பிரான்சிஸ் பேகன். இன்று இணையத்தில் பல நல்ல அறிவுசார் விடயங்கள் காணப்படுகின்றன. அவற்றிலும் நல்லவற்றைத் தேடிக் கற்க வேண்டும்.

மாணவப் பருவத்திலேயே மனிதனது பெரும்பாலான உடல் மற்றும் உளரீதியான மாற்றங்கள் நிகழ்கின்றன. இம்மாற்றங்களால் அவர்களின் மனதில் சில குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மாணாக்கர் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் பெரியோர்களினதும் அறிவுரைகளை அலட்சியப்படுத்தாது அவர்களது கருத்துக்களைக் கேட்டு அதற்கமையக் கற்க வேண்டும்.இவ்வாறு கற்கின்றபோதே ஒவ்வொரு மாணவனும் கல்விச் சிகரதை அடைய முடியும்.

எனவே மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒழுக்க சீலர்களாய் கல்வியினைக் கற்று தேர்ச்சி அடைந்து பண்பும், அன்பும் உள்ளவர்களாய் உருவாகி நாளைய உலகைச் சிறப்புடன் ஆட்சி செய்து உலகம் போற்றும் பெரியோர்களாக வரவேண்டும். எனவே

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்ற வாக்கிற்கு அமைய கல்வி கற்று உயர்நிலை அடைவோமாக.

---


## 07. வெளிநாட்டுப் பயணம்

### நோர்வே

நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எனச் சிறப்பிக்கப்படும் நோர்வே, ஐரோப்பாக் கண்டத்தில் வட துருவத்திற்கு அருகில் உள்ள ஸ்கன்டிநேவிய தீபகற்பத்தின் மேற்குக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள நாடு. நோர்வேயின் பெரும்பகுதி கடலால் சூழப்பட்டுள்ளது. இந்நாடு வடக்கே ஆர்ட்டிக் பெருங்கடல், மேற்கே நோர்வே கடல், தெற்கே வட கடல் என்பவற்றையும், கிழக்கில் சுவீடனையும், வடக்கே பின்லாந்தையும், ரசியாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. நோர்வே மலைகளும் கடல் நீரேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களும் நிறைந்த நாடு. இயற்கை எழிலை ரசிப்பதற்காக, பல வெளிநாட்டவர்கள் இங்கு வருகை தருகிறார்கள். புவியியல்படி நோர்வே அமைந்துள்ள பிரதேசம் கி.மு11000 - 8000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் உருவானது. இங்கே பனி உருகி நிலம் தோன்றியுள்ளது. அது நிலப்பரப்பின் அமைப்பிலேயே காண முடிகிறது. மண் குறைவு, எங்கும் பனி ஆறுகளால் செதுக்கப்பட்ட பாறைகள் மலையாக உயர்ந்து நிற்பதைக் காணலாம். இயற்கையின் பல்வேறு விசைகளின் காரணமாக பாறைகள் உடைந்து சிறு - துகள்களாக உருமாறுவதுதான் மண். இதற்கு பல்லாயிரம் ஆண்டுகள் தேவைப்படும். நோர்வேயோ புதிதாகத் தோன்றிய நிலப்பரப்பு. அநேக இடங்களில் ஐந்தடி தோண்டினாலே பாறை வந்து விடுகிறது.

ஏறத்தாள 5,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து மனித இனம் இங்கே வாழ்வதாக அகழ்வாராய்ச்சிக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. நோர்வே நாட்டில் குளிர் காலத்தில் எங்கும் உறைபனி படர்ந்து கிடக்கும். பூமியின் மைய சுழற்றி அச்சின் (central axis of rotation) 23 டிகிரி சாய்வின் காரணமாக குளிர் காலத்தில் அதிக நேரம் இருள் சூழ்ந்து இருக்கும். வெயில் காலத்தில், அதே 23 டிகிரி சாய்வின் காரணமாக அதிக நேரம் சூரிய ஒளி வீசும். இரு துருவத்திலும் தட்டையான பகுதி உள்ளது. அதன் காரணமாக வடக்கு நோர்வேயில் நள்ளிரவில் சூரியன் தென்படும். ஆகவேதான் நோர்வே "நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு" என அழைக்கப்படுகின்றது.

நீர்வளம் இருந்தபோதிலும் விவசாயம் செய்யக் கூடிய மண்வளம் இன்மையால் இந்நாடு விவசாய உற்பத்தியில் ஈடுபடுவது குறைவு. எனினும் கோடை காலத்தில் ஆங்காங்கே கோதுமை, வாற்கோதுமை (பார்லி), உருளைக்கிழங்கு என்பன விளை விக்கப்படுகின்றன. ஏனைய பெரும்பாலான பகுதிகள் புல்வெளிகளாகவே உள்ளது. அதில் குதிரைகள், மாடுகள் மேய்கின்றன. மாரி காலத்தில் மாடுகள் குதிரைகளைத் தொழுவத்தில் அடைத்து அதற்குத் தீவனமாக இப்புல் பயன்படுகின்றது.

நோர்வே நாட்டின் மேற்புற கடலில் எரிவாயு நிரம்பியிருப்பது 1960ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. அப்போதிருந்தே செல்வம் செழிக்கத் தொடங்கியது. உலகிலேயே அதிகமாக எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடும் ஏழாவது நாடு இது. இயற்கை எரிவாயு உற்பத்தியில் மூன்றாவது இடம். நாட்டின் மொத்த வருவாயில் 15 சதவீதம் எண்ணெய் உற்பத்தியில் கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்வளமும் நிறைந்துள்ளது. மீன்பிடித் தொழிலும் பிரதானம். நோர்வே நாட்டில் பத்தி ரிகைத் தொழிலும் முக்கியமானது. அநேகமான மக்கள் பத்திரிகைகளை விரும்பிப் படிக்கிறார்கள். நாட்டின் தனியார்துறையும் அரசுத் துறைகளும் சிறப்பாக இயங்கு கின்றன. கப்பல் கட்டும் தொழிற்சாலைகளும் இங்கு அதிகளவில் காணப்படுகின்றன. நீர்மின் நிலையங்கள் வழியாக மின்சார உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனூடாக தொழில் வாய்ப்புக்களும் அதிக அளவில் காணப்படுகின்றது.

நோர்வே நாட்டின் மொத்தப் பரப்பளவு: 3,85,207கி.மீ இது உலகின் 61 ஆவது பெரிய நாடு. இந்நாட்டின் மக்கள் தொகை 5,391,369. நோர்வேயின் தலைநகரம் ஒஸ்லோ. இந்நாட்டின் நாணயம் நோர்வே குரோன் (NOK), இந்நாட்டின் ஆட்சி மொழி யாக நோர்வே மொழி (பூக்மோல் மற்றும் நீநொர்ஸ்க்) காணப்படுகின்றது. பெரும் பாலான மக்கள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள். நோர்வேயியன் இவர்களது தாய் மொழி. சராசரி வாழ்நாள் காலம் ஆண்களுக்கு 79ஆகவும், பெண்களுக்கு 83 ஆகவும் உள்ளது.

நாட்டில் கல்வித் துறையும் சிறப்பானது. மாணவர்கள் கல்வி கற்க விரும்பும் நாடு களில் உலகில் நோர்வே நாட்டுக்கு 10ஆவது இடம். 97 சதவீத நோர்வே மக்கள் இணைய வசதியைப் பெற்றிருக்கிறார்கள். இராணுவத்தில் மொத்தம் 25 ஆயிரம் வீரர், வீராங்கனைகள்தான் உள்ளனர். குட்டி இராணுவமாக இருந்தாலும் உலகம் முழுதும் நோர்வே இராணுவம் சென்று சேவை புரிகிறது. சமாதானத்தை விரும்பும் நாடுதானே சமாதானத்தை விதைக்க முயலும். அந்த வகையில் நோர்வே உலகுக்கே முன்மாதிரி யாக உள்ளது.

நோர்வேயில் மன்னர் ஆட்சியுடன் கூடிய மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. கடந்த 1991ஆம் ஆண்டு மன்னர் நான்காம் ஓலவ் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, அவரின் மகன் இளவரசர் ஹெரால்ட் மன்னர் ஆனார். இவர் ஒரு யாட்ச் வீரர். மியூனிச் ஒலிம்பிக் உட்பட மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றிருக்கிறார். அரச குடும்பத்தைச் சேர்ந்தவரை திருமணம் செய்யாமல் சாமானியக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்துள்ளார். எர்னா சோல்பர்க், கடந்த 2013ஆம் ஆண்டு நோர்வே நாட்டின் பிரதமர் ஆனார். இவரது அமைச்சரவையில் பாதிக்கு மேற்பட்ட வர்கள் பெண்கள். பெண் சக்திக்கு முக்கியத்தும் கொடுக்கும் நாடு. நோர்வே சுதந்திரம் அடைந்த தினம் 1815ஆம் ஆண்டு, வைகாசி 17. இத்தினம் சுதந்திர தினமாக ஒவ்வொரு வருடமும் குழந்தைகளின் ஊர்வலத்துடன் கலகலப்பாகக் கொண்டாடப்படுகிறது.

நோர்வே மக்களின் ஆண்டு வருவாய் 71 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். தரமான வாழ்க்கை மக்களுக்குக் கிடைக்கிறது. சுகாதாரம், கல்வி போன்றவற்றுக்கு அரசே எல்லாவித உதவிகளையும் செய்யும். மாணவர்களுக்கு பல்கலைக்கழகப் படிப்பு வரை கடன் வழங்கப்படும். படிப்புக்குத் தடையே கிடையாது.

அதேபோல் நல்ல மருத்துவ வசதி, முதியவர்களைப் பார்த்துக் கொள்வதற்குக் கூட அரசே மருத்துவமனைகளுக்கு நிதி அளிக்கின்றது. மக்கள் உடல் நலனில் நோர்வே அரசு அதிகளவு அக்கறை செலுத்துகிறது. எல்லா வழிகளாலும் முன்னேற்றம் கண்டுள்ள நோர்வே மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கும் ஏற்றதொரு நாடாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகமே வாழ்க்கை

சவால் நிறைந்த அரசியல்

## சோதனைகளைச் சாதனையாக்கிய ஜோ பைடன்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மின் ஆட்சியில் ஏற்பட்ட அதிருப்தி தான் அரசியலே வேண்டாம் என ஒதுங்கியிருந்த ஜோ பைடனை மீண்டும் தீவிர அரசியலுக்குள் இழுத்தது. அமெரிக்காவில் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஜோ பைடன் வெற்றி பெற்றார். இந்த வெற்றி ஜோ பைடனுக்கு அவ்வளவு எளிதில் கிடைத்து விடவில்லை.

அமெரிக்க அதிபர் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நீண்ட இழுபறிக்குப் பின் 2020 நவம்பர் ஏழாம் திகதி முடிவுக்கு வந்தது. ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன் 290 பிரதிநிதிகளின் வாக்குகளைப் பெற்று அமெரிக்காவின் 46ஆவது அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார். தற்போது 77 வயதாகும் ஜோ பைடன தான் அமெரிக்க வரலாற்றிலேயே அதிக வயதில் அதிபராகப் பதவியேற்ற முதல் நபர்.

அரை நூற்றாண்டைத் தாண்டிய ஜோ பைடனின் பொதுவாழ்க்கையில் சோகமும் வலியும் நிறைந்த பக்கங்கள் ஏராளம். 1942ஆம் ஆண்டு வடகிழக்கு பென்சில்வேனியாவின் ஸ்க்ரேன்டன் நகரில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் ஜோ பைடன் மூத்த மகனாகப் பிறந்தார். அவரது தந்தை ஜோசப் ராபினெட் பிடன் சீனியர் பழைய கார்களை வாங்கி விற்பனை செய்யும் ஒரு வியாபாரி. ஆரம்பத்தில் நல்ல வசதியோடு இருந்த அந்தக் குடும்பம், ஜோ பைடனின் பிறப்பின்போது கடும் வறுமைக்குள் தள்ளப்பட்டது. பைடனுக்கு ஒரு தங்கை, இரு தம்பிமார் என்று உடன் பிறந்தவர்கள் மூவர்.

பள்ளிப் பருவத்தில் கால்பந்து மற்றும் பேஸ்பால் உள்ளிட்ட விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்துள்ளார் பைடன். அதுமட்டுமின்றி, அவரது பெற்றோரும் அவரை மிகவும் துணிச்சல் மிக்கவராகவே வளர்த்தனர். தனது பெற் றோர் குறித்து ஒரு பேட்டியில் குறிப்பிடும் ஜோ பைடன், 'எனது தந்தை எத்தனை முறை கீழ விழுந்தாலும் மீண்டும் எழக் கூடியவராகவே இருந்தார்' என்று கூறுகிறார்.

மேலும், தன்னை விடப் பெரிய பையன் ஒருவன் தன்னைக் கேலி செய்ததைப் பற்றி தன் தாயிடம் கூறியபோது, 'அவனுடைய மூக்கை உடைத்துவிட்டு வா. அப்போதுதான் நாளை நீ தெருவில் தைரியமாக நடந்து செல்ல முடியும்' என்று தனது தாய் கூறியதாக பைடன் குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் திக்குவாயாக இருந்த பைடன் தொடர்ந்து சக மாணவர்களால் கேலிக்கு ஆளாகி வந்துள்ளார். மிக நீண்ட கட்டுரைகளையும், கவிதைகளையும் மனனம் செய்து அவற்றைக் கண்ணாடி முன்பு நின்று சத்தமாக ஒப்புவித்து தனது திக்குவாய் பிரச்சினையிலிருந்து மீண்டுள்ளார் பைடன்.

டெலவர் மாகாணத்தில் அமைந்துள்ள பிரபலமான ஆர்டமியர் பள்ளியில் படித்த பைடன், தனது கல்விச் செலவுக்காகப் பள்ளியின் ஜன்னல்களைச் சுத்தம் செய்வது, மைதானத்தில் மண்டிக் கிடக்கும் புதர்களை அகற்றுவது போன்ற வேலைகளைச் செய்து வந்தார்.

1961ஆம் ஆண்டு தனது பள்ளிப் படிப்பை நிறைவு செய்த பைடன், டெலவர் பல் கலைக்கழகத்தில் வரலாறு மற்றும் அரசியல் படித்தார். கூடவே கால் பந்தாட்டத்தையும் தொடர்ந்தார். இந்தச் சூழலில்தான் அவர் அரசியல் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார்.

1965ஆம் ஆண்டு சீரக்யூஸ் சட்டக் கல்லூரியில் தனது சட்டப் படிப்பைத் தொடங்கிய பைடன் அடுத்த ஆண்டே தனது கல்லூரிக் காதலியான நீலியா ஹண்டரைத் திருமணம் செய்து கொண்டார்.

1968ஆம் ஆண்டு சட்டப் படிப்பை முடித்த ஜோ பைடன் தன்னை ஜனநாயகக் கட்சி யில் இணைத்துக் கொண்டு செயல்படத் தொடங்கினார். இதற்கிடையில் பைடனுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனர்.

1972ஆம் ஆண்டு அமெரிக்க செனட் சபை உறுப்பினர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான கேலப் பாக்ஸ் என்பவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டி யிட்டார் ஜோ பைடன். அவரிடம் பிரசாரத்திற்குத் தேவையான பணபலமோ, ஆட் பலமோ இல்லை. அவரது குடும்ப உறுப்பினர்களே அவருக்காகப் பிரசாரம் செய்து வந்தனர். பைடனின் தங்கை மற்றும் பெற்றோர் அயராது தினமும் பைடனுக்காக பிரசாரம் மேற்கொண்டனர். அதன் விளைவாக, டெலவர் மாகாணத்தின் பெரும்புள்ளி யாகத் திகழ்ந்த கேலப் பாக்ஸை வீழ்த்தி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றார் ஜோ பைடன். அமெரிக்க வரலாற்றிலேயே மிக இளம் வயதிலேயே செனட் சபை உறுப்பி னரான ஐந்தாவது நபர் பைடன். அப்போது அவருக்கு வயது 29.

வெற்றிப் படிக்கட்டின் ஏறுமுகத்தில் சென்று கொண்டிருந்த ஜோ பைடனின் வாழ் வில் ஒன்று மிகப்பெரிய இடி ஒன்று இறங்க காத்துக் கொண்டிருந்தது. 1972ஆம் ஆண்டு கிறிஸ் மஸ் பண்டிகைக்கு முந்தைய வாரம், பண்டிகைக்கான பொருட்கள் வாங்குவதற்காக ஜோ பைடனின் காதல் மனைவி நீலியா தனது மூன்று குழந்தைகளையும் காரில் அழைத்துச் சென்றார். அப்போதுதான் அந்த துர்ச் சம்பவம் நிகழ்ந்தது. எங்கிருந்தோ சோளக்கதிர்களை சுமந்து வந்த பெரிய லாரி ஒன்று அவர்கள் வந்த காரில் மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே நீலியா மற்றும் அவரது 9 வயது மகளான ஏமி இருவரும் உயிரிழந்தனர். மகன்மார் பியூ மற்றும் ராபர்ட் இருவரும் படுகாயங்களுடன் உயிர் தப்பினர்.

மனைவி மற்றும் மகளின் இழப்பைப் பைடனால் ஜீரணிக்க முடியவில்லை. தற்கொலை எண்ணங்கள் கூட அவருக்கு எழுந்தன. இந்த இழப்புக் குறித்துக் குறிப்பிடுகையில், தனக்குக் கடவுள்மீது கோபம் வந்ததாகக் கூறுகிறார் பைடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மகன்மாரின் நலனைக் கருத்தில் கொண்டு செனட் சபை உறுப்பினர் பதவியைக் கைவிட பைடன் முடிவு செய்தார். இதை செனட் சபையின் மூத்த தலைவர்களிடமும் தெரிவித்தார். ஆனால், அவர்கள் தொடர்ந்து வற்புறுத்தவே ராஜினாமா முடிவைக் கைவிட்டார். எனினும் வாஷிங்டனில் நடைபெற்ற புதிய செனட் உறுப்பினர்களுக்கான பதவிப் பிரமாணத்தில் பைடன் கலந்து கொள்ளவில்லை. மாறாக தனது மகன்மார் சிகிச்சை பெற்று வந்த மருத்துவமனை அறையிலேயே பதவியேற்றுக் கொண்டார் பைடன்.

தனது மகன்மாருக்காக டெலவரிலேயே தங்கிவிட்டார் பைடன். அடுத்த 36 ஆண்டுகள் அங்கிருந்து தினமும் ரயிலில் வாஷிங்டனுக்குச் சென்று தனது பணிகளைச் செய்து வந்தார்.

ஆசிரியையான ஜில் ட்ரேஸி என்பவரை 1977ஆம் ஆண்டு ஜோ பைடன் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். ஜில் ட்ரேஸியைப் பற்றிக் கூறும்போது 'தான் மீண்டும் பொதுவாழ்க்கையில் நுழைய தனது இரண்டாம் மனைவியே காரணம்' என்று கூறுகிறார் பைடன்.

1987ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தார் பைடன். அதற்கான பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தபோது அவருக்குத் தலையில் அடிக்கடி கடுமை யான வலி ஏற்பட்டது. அவருக்கு மூளையில் இருக்கும் இரத்த நாளங்களில் இரண்டில் மிகப்பெரிய வீக்கங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் உடனடியாக தலையில் அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும் எனவும் மருத்துவர்கள் அவரிடம் தெரிவித்தனர்.

மூளை அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்த நிலையில், அதனால் ஏற்பட்ட பக்கவிளைவாக அவரது நுரையீரலில் இரத்த உறைவு ஏற்பட்டது. இதனால் மீண்டும் ஒரு முறை அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் பைடன். எப்போதும் தடைகளிலிருந்து மீண்டெழும் குணம் படைத்த பைடன், ஏழுமாத ஓய்வுக்குப் பிறகு மீண்டும் அரசியல் வாழ்க்கையில் நுழைந்தார்.

20 ஆண்டு காலம் அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியின் தொடர் தோல்விகளுக்குப் பின்னர் 2007 ஆம் ஆண்டு மீண்டும் அதிபர் தேர்தலில் களமிறங்கினார் பைடன். செனட் சபையின் நீண்ட கால அனுபவம் வாய்ந்த உறுப்பினராக இருந்தும் ஒபாமா மற் றும் ஹிலாரி கிளின்ரனின் பிரசாரங்களுக்கு முன்னால் பைடனின் பிரசாரம் எடு படாமல் போனது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஜனநாயகக் கட்சி யின் அமெரிக்க அதிபர் வேட்பாளருக்கான தேர்தலில் ஒரு சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளே பெற்றிருந்தார். அன்று மாலையே போட்டியிலிருந்து விலகிக் கொண்டார் பைடன்.

படுதோல்வியைத் தழுவியிருந்தாலும், அமெரிக்க அரசியல் வட்டாரத்தில் பைடனின் பிரசார முறை பெரிதும் பேசப்பட்டது. குறிப்பாக ஒபாமாவின் கவனம் பைடனின் பக்கம் திரும்பியது. பைடனின் பிரசார உத்தியால் பெரிதும் கவரப்பட்ட ஒபாமா அவரைத் துணை அதிபராகப் போட்டியிடுமாறு தனிப்பட்ட முறையில் வேண்டுகோள் விடுத்தார்.

முதலில் தயங்கிய பைடன், பின்னர் அதனை ஏற்றுக் கொண்டார். 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம், தங்களை எதிர்த்துப் போட்டியிட்ட குடியரசுக் கட்சி வேட்பாளர் களான ஜான் மெக்கெய்ன் மற்றும் சாரா பேலின் இருவரையும் தோற்கடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒபாமா மற்றும் பைடன் இருவரும் வெற்றி பெற்றனர். 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்காவின் 44 ஆவது அதிபராக பராக் ஒபாமாவும், 47 ஆவது துணை அதிபராக ஜோ பைடனும் பதவியேற்றுக் கொண்டனர்.

நான்கு ஆண்டு கால ஆட்சி முடிந்து, 2012ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் இந்தக் கூட்டணி மீண்டும் வெற்றி பெற்றது. துணை அதிபராகப் பதவியேற்ற மூன்றாம் ஆண்டில் (2015) ஜோ பைடனின் வாழ்வில் மீண்டும் ஒரு பேரிழப்பு ஏற்பட்டது. பைடனின் மூத்த மகனான ப்யூ பிடன் மூளைப் புற்றுநோயால் தனது 42 ஆவது வயதில் மரணமடைந்தார். மகனின் இழப்பு பைடனை மனதளவில் பெரிதும் சோர்வடையச் செய்தது.

2016ஆம் ஆண்டுக்கான அதிபர் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்தார் பைடன். அவருக்காக வெள்ளை மாளிகையில் ஒரு விழாவை ஏற்பாடு செய்தார் ஒபாமா. அந்த விழாவில் பேசுகையில், அமெரிக்கா வரலாற்றில் சிறந்த 'துணை அதிபர்' என்றும் 'அமெரிக்க வரலாற்றின் சிங்கம்' என்றும் பைடனுக்குப் புகழாரம் சூட்டினார் ஒபாமா.

ஒபாமாவுக்குப் பிறகு அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப்பின் செயல்பாடுகள் அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்கியிருந்த பைடனுக்குக் கோபத்தை ஏற்படுத்தின. தொடர்ந்து சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் ட்ரம்ப்பின் நிர்வாகத்தைக் கடுமையாக விமர்சித்து வந்தார் பைடன். ட்ரம்ப்புக்கு நிர்வாகம் என்றால் என்னவென்றே தெரியவில்லை என்றும் சாடினார்.

2020 அமெரிக்க அதிபர் தேர்தலில் பைடன் போட்டியிடுகிறார் என்று பல்வேறு ஊடகங்களும் தொடர்ந்து செய்தி வெளியிட்டு வந்தன. ஆனால் அதிபர் தேர்தலில் தான் போட்டியிடவில்லை; தனது மகனின் இழப்பிலிருந்து தான் இன்னும் முழுமையாக மீளவில்லை என்று அச்செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் பைடன்.

ஆனால், கடந்த ஆண்டு (2019) ஏப்ரல் மாதம் பெரும்பாலான அமெரிக்கர்கள் எதிர்பார்த்திருந்த அந்த அறிவிப்பை வெளியிட்டார் ஜோ பைடன். மூன்றரை நிமிடம் ஓடக்கூடிய அந்த வீடியோவில் பேசிய பைடன் அமெரிக்காவிற்குத் தற்போது ஏற்பட்டிருக் கும் அச்சுறுத்தல் தன் வாழ்நாளில் பார்க்காதது என்று குறிப்பிட்டு 2020 அதிபர் தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக அறிவித்தார். 2020 ஆகஸ்ட் மாதம் தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்டவரான கமலா ஹாரிஸை துணை அதிபர் களுக்கான வேட்பாளராக அறிவித்தார்.

அமெரிக்காவின் 50 மாகாணங்களில் மொத்தம் 538 பிரதிநிதிகள் உள்ளனர். இதில் 270 பிரதிநிதிகளின் வாக்குகளைப் பெறும் வேட்பாளர்தான் அதிபர் தேர்தலில் வெற்றி பெற முடியும். ஜோ பைடன் 290 பிரதிநிதிகள் வாக்குகளைப் பெற்றதையடுத்து, அவர் வெற்றி பெற்றதாக அமெரிக்க ஊடகங்கள் அறிவித்தன.

பல இடையூறுகளையெல்லாம் கடந்து அமெரிக்க வரலாற்றிலேயே 'அதிக வாக்குகளைப் பெற்ற அதிபர்' என்ற பெருமையைத் தக்க வைத்துள்ளார் ஜோ பைடன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனாத் தொற்றைக் கையாண்டது; நட்பு நாடுகளை உதாசீனப்படுத்தியது; நிற வெறிக்கு ஆதரவாக நின்றது; பருவநிலை மாற்ற அமைப்பைப் புறக்கணித்து வெளியேறியது; தொற்று மையத்தை இழுத்து மூடியது என்பன டொனால்ட் ட்ரம்ப்பின் தோல்விக்கு வழிவகுத்தன. மாறாக, முன்னேறிய சமுதாயமும் அமெரிக்க இளைஞர்களும் ட்ரம்ப்பின் பிற்போக்குச் சிந்தனையை ஆதரிக்கவில்லை. ட்ரம்ப்புக்கு நேர்மாறாக ஒன்றுபட்ட அமெரிக்கா, கொரோனா குறித்த தெளிவான அறிவியல் அணுகுமுறை, அண்டை நாடுகளின் நட்புறவு குறித்த பிரசாரம் என்பன ஜோ பைடனின் வெற்றிக்கு வழிவகுத்தன. அமெரிக்க அதிபர்கள் தவறான நபர்களாக வந்தபோதுதான் அதன் விளைவை உலக மக்கள் அனுபவித்துள்ளனர். பொறுப்பான அணுமுறையுள்ள ஜோ பைடன் அமெரிக்க அதிபர் ஆவதன்மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட உலக சமுதாயத்துக்கு நன்மை கிடைத்தால் அனைவருக்கும் மகிழ்ச்சியே.

நன்றி ஆதாரம்:
இணையம் இந்து தமிழ் திசை
சல்மான் (8.11.2020)

## 09. அதிசயிக்க வைக்கும் உண்மைகள்

**லெமூரியா: கடலுக்குள் புதைந்த கண்டம் உண்மையில் இருந்ததா? அதுதான் குமரிக் கண்டமா? - தமிழர் வரலாறு**



கண்டப் பெயர்ச்சியால் இப்போதுள்ள கண்டங்கள் பல லட்சம் ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் ஒரே கண்டமாகலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

தற்போதைய தமிழக நிலப்பரப்பிற்குத் தெற்கே லெமூரியாக் கண்டம் என்ற ஒன்று இருந்ததாகவும் அங்கு தமிழர்கள் வாழ்ந்ததாகவும் நீங்கள் ஏதாவது நூலிலோ, செய்தியிலோ, இணையத்தளத்திலோ குறைந்தது ஒரு முறையாவது படித்திருப்பீர்கள். இணையத்தில் இது பற்றிய காணொளிகளும் ஏராளம்.

ஆனால் லெமூரியாக் கண்டம் என்ற ஒன்று உண்மையாகவே இருந்ததா? என்றால் அந்தக் கேள்விக்கான பதில் 'இல்லை' என்பதுதான். மொரிஷியஸ் தீவுகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், இந்தியப் பெருங்கடலுக்குள் புதைந்திருக்கும் குறுங்கண்டம் ஒன்றுக்கு "மொரிஷியா" என்று அறிவியலாளர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். 2013இல் கண்டுபிடிக்கப்பட்டது இது.

உண்மையைக் கலந்து சொன்னால் நம்பகத்தன்மை கிடைக்கும் எனும் நம்பிக்கையில், இந்தக் கண்டம்தான் 'லெமூரியா' கண்டம் என்றும் சிலர் கூறி வருகிறார்கள். ஆனால், அது உண்மையல்ல. மனித குலத்தின் வரலாறு தொடங்கும் முன்னரே, இந்த நிலப்பரப்பு கடலுக்குள் மூழ்கி விட்டது. 90 லட்சம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த எரிமலை வெடிப்பின்போது பூமிக்கு அடியில் இருந்த துகள்கள் மொரிஷியஸ் கடற்கரையில் கிடைத்தன. அந்தத் துகள்களில் செய்யப்பட்ட ஆய்வின்மூலம் மொரிஷியாவின் காலம் கண்டறியப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காலம் 200 கோடி முதல் 8.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வரை என்கிறது 'நேச்சுர் ஜியோசயின்ஸ்' சஞ்சிகையில் 2013 பிப்ரவரியில் வெளியான கட்டுரை ஒன்று. அப்படியானால் லெமூரியாக் கண்டம் எனும் கருத்தாக்கம் எப்படி உருவானது, அப்படி ஒரு கண்டமே இல்லை என்பதற்கு அறிவியல்சார்ந்த ஆதாரங்கள் இருக்கின்ற னவா, தமிழ் இலக்கியங்களில் உண்மையாகவே லெமூரியாக் கண்டம் பற்றிய குறிப்பு உள்ளதா என்பனவற்றுக்குப் பதில் தருகிறது இந்தக் கட்டுரை.

**லெமூரியாக் கண்டம் - கடலுக்குள் மூழ்கி அழிந்து விட்டது**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இங்கிலாந்தைச் சேர்ந்த விலங்கியலாளர் பிலிப் ஸ்கேட்லர் என்பவர் மடகாஸ்கரின் பாலூட்டிகள் (The Mammals of Madagascar) என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டார். அதில் 'லெமூர்' விலங்குகளின் படிமங்கள் இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவான மடகாஸ்கரிலும் இந்திய நிலப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஆனால் மடகாஸ்கர் ஓர் அங்கமாக இருக்கும் ஆபிரிக்க கண்டத்தின் பெருநிலப்பரப்பில் இல்லை. எனவே கடந்த காலங்களில் மடகாஸ்கர் மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நிலப்பரப்புகளையும் இணைத்த, ஒரு கண்டம் இருந் திருக்கலாம். அப்போது லெமூர் விலங்குகள் இரு பகுதிகளுக்கும் சென்று வந்திருக் கலாம் என்று கூறினார். அந்த கண்டத்தின் பெயர்தான் லெமூரியா என்றும் அது பின்னர் கடலுக்குள் மூழ்கி அழிந்து விட்டது என்றும் பிலிப் ஸ்கேட்லர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

லெமூரியாக் கண்டத்தின் வரைபடம் எனும் பெயரில், அறிவியல்பூர்வமாக உறுதிப் படுத்தப்படாத பல நூறு படங்கள் இணையத்தில் கிடைக்கின்றன. இவர் இதை முன்வைத்தபோது ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தக் கூற்று பிற்காலத்தில் அறிவியலாளர்க ளால் மறுக்கப்பட்டது ஏன்?

**அறிவியல் வளர்ச்சியால் வெளியான உண்மைகள்**

பிலிப் ஸ்கேட்லர் 'லெமூரியாக் கண்டம்' என்ற ஒன்று இருந்ததாகக் கூறியபோது, இடையில் ஒரு நிலப்பரப்பு இருப்பதைத் தவிர, ஒரே விலங்கினம் கடலால் பிரிக்கப்பட்ட வெவ்வேறு நிலப்பரப்புகளில் வாழ்ந்திருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றே கருதப்பட்டது. எனவே, அதை அறிவியல் உலகமும் ஏற்றுக் கொண்டது. புவிசார் அறிவி யல் இந்த அளவுக்கு வளர்ச்சி அடையாத காலகட்டம் அது. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐரோப்பிய புவியியலாளர் ஆப்ரகாம் ஓர்டெலியஸ் என்பவர் கண்டங்கள் அனைத்தும் ஒன்றாக இருந்து அதன்பின்பு அவை ஒன்றில் இருந்து ஒன்று நகர்ந்து வெவ்வேறு கண்டங்களாக உருவாகின எனும் கோட்பாட்டை முன்வைத்தார். ஒரு கண்டத்தின் வெளிப்புற வடிவம் இன்னொரு கண்டத்தின் வெளிப்புற வடிவத்துடன் பொருந்தும் வகையில் இருப்பதை அதற்கு அவர் சான்றாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அவருக்குப் பின்னால் வந்த சில அறிவியலாளர்களைத் தவிர இதை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதன்பின்பு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மானிய புவியியலாளர் ஆல்ஃப்ரெட் வெகேனர் கண்டப் பெயர்ச்சி (Continental Drift) கோட்பாட்டை முன்வைத் தார். அப்போது இதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும் புவியத் தட்டுகள் (Tectonic plates) நகர்தல் குறித்த கண்டுபிடிப்புகள் இதற்கு வலிமை சேர்ப்பதாகவும் அதை நிரூபணம் செய்யும் வகையிலும் அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கோடி ஆண்டுகளுக்கு முன் தற்போது உள்ள அனைத்துக் கண்டங்களும் ஒரே நிலப்பரப்பாக இருந்தன என்றும் அதன்பின்பு, பூமியின் மேற்பரப்புக்கு அடியில் இருக்கும் புவியத் தட்டுகளின் நகர்தல் காரணமாக வெவ்வேறு கண்டங்கள் உருவானதும் பின்னாளில் நிரூபணமானது.

அவ்வாறு அனைத்துக் கண்டங்களும் ஒன்றாக இருந்த நிலப்பரப்பு, தற்போதைய தனித்தனி கண்டங்களாக உருவாகும் முன்னர் பல முறை பிரிந்து பிரிந்து மீண்டும் இணைந்துள்ளன.

வெவ்வேறு காலத்தில் உருவான பெருங்கண்டங்கள் பான்கையா (pangea), ரொடினியா (rodinia) என்று வெவ்வேறு பெயர்களுடன் அறிவியலார்களால் அழைக்கப்படுகின்றன. சுமார் 75 கோடி (750 மில்லியன்) ஆண்டுகளுக்கு முன்பு ரொடினியா என்ற பெரும் கண்டமாக தற்போதைய உலகில் உள்ள ஒட்டுமொத்த நிலப்பரப்பும் இணைந்து இருந்தது.

**ரொடினியாவில் இந்தியா மற்றும் மடகாஸ்கர் ஆகிய நிலப்பரப்புகள் அருகருகே இருந்துள்ளன.**

இவை இரண்டும் சுமார் 8.5 கோடி ஆண்டுகளுக்கு முன் கண்டப் பெயர்ச்சி காரணமாகப் பிரியத் தொடங்கின. இதன் பின்னர்தான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த "மொரிஷியா" கடலுக்குள் மூழ்கத் தொடங்கியது. புவியத் தட்டுகள் நகர்ந்து உண்டாக்கிய கண்டப் பெயர்ச்சி காரணமாகவே இந்தியா மற்றும் மடகாஸ்கர் இடையே இடைவெளி உண்டானது. அப்போது ஒரே நிலப்பரப்பாக இருந்தபோது வாழ்ந்த விலங்குகளின் படிமங்களே பின்னாளில் கிடைத்தன என்று தெரியவந்தபின், 'லெமூரியாக் கண்டம்' என்ற ஒன்று இல்லை என்றும் முடிவு செய்த அறிவியல் உலகம் பிலிப் ஸ்கேட்லர் முன்வைத்த கருதுகோளை மறுதலித்தது.

**குமரிக் கண்டம் - லெமூரியா கண்டம்**

லெமூரியா கண்டம் குறித்த கருதுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த காலத்தில் ஆசியா மற்றும் அமெரிக்க கண்டங்களில் ஒரே விலங்கினங்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்தபின், இடையில் நிலப்பரப்பு இருந்தது என்று கருதிய சில அறிவியலறிஞர்கள் பசுபிக் பெருங்கடலின் சில பகுதிகளிலும் லெமூரியாக் கண்டம் நீண்டிருந்தது என்று கூறினர்.

இதன்பின்பு கடலுக்குள் மூழ்கிய கண்டங்களாக லெமூரியா மற்றும் அட்லாண்டிஸ் ஆகியவை உலக அளவில் பெயர் பெறத் தொடங்கின. இது குறித்த விரிவான கட்டுரை ஒன்று 'ஃப்ரண்ட்லைன்' இதழில் புவிநீர் அமைப்பியலாளர் எஸ். கிறிஸ்டோபர் ஜெயகரனால் 2011ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது.

லெமூரியாக் கண்டம் குறித்து மேற்குலகில் எழுதப்பட்ட கட்டுரைகள் மற்றும் வரைபடங்கள் 1941இல் கே.அப்பாதுரை என்பவர் எழுதிய "குமரிக் கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு" எனும் நூலில் பயன்படுத்தப்பட்டதாக அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் சங்க காலத்திலும் அதன் பின்னரும் எழுதப்பட்ட புறநானூறு, சிலப்பதிகாரம், கலித்தொகை உள்ளிட்டவற்றின் பாடல்களில் கடலில் மூழ்கிய சில நிலப்பரப்புகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கப் பாடல்களில் குறிப்பிடப்பட்டிருந்த மலைகள், ஆறுகள், ஊர்கள் உள்ளிட்ட அனைத்துப் பெயர்களும் லெமூரியாக் கண்டத்தில் இருந்ததாக தமிழில் எழுதப்பட்ட தாகவும் இந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் கிறிஸ்டோபர் ஜெயகரன்.

அதாவது, உலகின் வெவ்வேறு பகுதியிலும் 'லெமூரியா' குறித்த தகவல், தங்கள் நிலப்பரப்புடன் தொடர்புடையதாக மாற்றப்பட்டதைப் போல, தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தகவல்கள் லெமூரியாவுடன் பொருத்தப்பட்டன.

பின்னாட்களில் வந்த நக்கீரர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்களின் எழுத்துகள் சிலப்பதிகாரம் மற்றும் கலித்தொகையில் கடலுக்குள் மூழ்கியதாக குறிப்பிடப்பட்டிருந்த நிலப்பரப்பை மிகைப்படுத்திக் கூறியதாகவும் அவர்களின் கூற்றுப்படி குமரிக் கண்டத்தில் இருந்ததாகக் கூறப்படும் குமரி ஆறு மற்றும் பஃறுளியாறு ஆகியவற்றுக்கு இடையேயான தூரம் 770 கிலோமீட்டர் என்றும் அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெமூரியாக் கண்டம் வேறு குமரிக் கண்டம் வேறு.... லெமூரியா கண்டம் என்பது ஒருவேளை பொய்யானதாக இருந்தாலும் பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குமரிக் கண்டம் என்பது உண்மைதான் என்று கூறும் ஒரு தரப்பினர் கடலில் மூழ்கிய நகரங்கள் குறித்து இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளவற்றைக் தங்கள் சான்றாக முன்வைக்கின்றனர்.

குமரிக் கண்டத்தில் 49 நாடுகள் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் வரலாற்றுக் காலத்தில் நாடு எனும் சொல் ஊர் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதும், சில ஊர்கள் ஒன்று சேர்ந்தாலே நாடுகளாக இருந்துள்ளன என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாது உலகில் இருக்கும் பல்வேறு பகுதிகளைப் போலவே, இன்றைய இந்தியாவின் கடலோரப் பகுதிகளும் கடல் அரிப்பின் காரணமாக கடலுக்குள் மூழ்கிய தற்கான அறிவியல் சான்றுகள் நிறைய கிடைத்துள்ளன. ஆனால் 'கண்டம்' என்று கூறப்படும் அளவுக்கு பெரிய நிலப்பரப்புதான் மூழ்கியது என்பதற்கான எந்தக் சான்றும் இல்லை.

நிலத்துக்கு அடியிலும் கடல் நீருக்கு அடியிலும் என்னவெல்லாம் இருக்கிறது என்பதைச் செயற்கைக் கோளில் இருந்தபடியே படமெடுக்கும் தொழில்நுட்பம் வந்து பல ஆண்டுகள் ஆகின்றன. இப்போதுவரை கடலுக்கடியில் இருப்பதாகக் கூறப்படும் அந்தக் குமரிக் கண்டத்தின் படம் ஏதும் தென்னிந்தியக் கடற்பரப்பை ஒட்டிக் கிடைக்கவில்லை.

ஒருவேளை இனி அப்படி ஒரு நிலப்பரப்பு கண்டுபிடிக்கப்பட்டாலும், தமிழ் இலக்கியங் களில் கூறப்பட்டிருப்பதைப் போல மனித நாகரிகத்தின் வரலாற்றுக் காலத்துக்கு பிறகு கடலில் மூழ்கியதாக அது இருக்க வாய்ப்பில்லை. மொரிஷியா போல பல லட்சம் முதல் சில கோடி ஆண்டுகளுக்கு முந்தையதாகவே அது இருக்கும்.

---

நன்றி பி.பி.சி

(இணையத் தளத்திலும் சமூக ஊடகங்களிலும் பல தவறான கூற்றுகள் அறிவியல் ரீதியான காரணங் கள் எனும் பெயரில் உலா வருகின்றன. அவற்றில் சிலவற்றுக்கான உண்மையான காரணங்கள் என்ன என்பதை விளக்கி "Myth Buster" எனும் பெயரில் பிபிசி தமிழ் தொடராக வெளியிடுகிறது. இதன் 6 பாகங்கள் 2020இல் வெளியாகின. 8ஆம் பாகம் இது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. விலங்கொன்றின் வாழ்க்கை

### ♦ கொக்கு



உயிரியல் வகைப்பாடு
திணை:விலங்கினம்
தொகுதி: முதுகுநாணி
வகுப்பு: பறவை
வரிசை:சைக்கோனிஃபார்ம்ஸ் (Ciconiformes)
குடும்பம்: ஆர்டியேடே (Ardeidae)

நாம் வயல் வெளிகளில் உள்ள நீர் நிலைகளில் கொக்குகள் ஒற்றைக்காலில் நிற்பதைக் கண்டிருக்கின்றோம். பொதுவாக இவை தமக்கு வேண்டிய உணவைப் பிடிப்பதற்காகவே இவ்வாறு காத்திருப்பதாகச் சொல்லுவதுண்டு.

கொக்கின் சொண்டு, கழுத்து, கால் என்பன மிக நீளமானவை. கொக்குகள் பொதுவாக வெள்ளை நிறத்தில் காணப்படுகின்றன. இவை மீன்கள், புழுக்கள், பூச்சிகள் என்பனவற்றைத் தமது உணவாக உட்கொள்கின்றன. பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ப கொக்குகள் இடம் பெயர்கின்றன.

கொக்குகள் பல வகையில் காணப்படுகின்றன. இதில் ஒரு வகை வெண்கொக்கு இனம். இது பெரும் கொக்கு (Large egret), நடுத்தர வெண்கொக்கு( Intermediate egret), சிறுவெண் கொக்கு (Little egret) என உடல் பருமனின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றது. இதில் நடுத்தர வெண்கொக்குகளுக்கு முட்டை இடும் காலத்தில் அதன் முதுகுப் பகுதியில் அழகிய வெண்ணிற இறகுகள் உருவாகும். இந்த இறகுகள் அக்காலப் பெண்களது அழகுசாதனப் பொருட்களில் பயன்படுத்தப்பட்டமையால், இக்கொக்கினம் அமெரிக்க ஐரோப்பியக் கண்டங்களில் அருகிப் போனது.

கொக்கின வகைகளில் 'மாட்டுக் கொக்குகள்' என அழைக்கப்படும் ஒரு வகைக் கொக்குகளை மாடுகள் இருக்கும் இடங்களில் அதிகம் காணலாம். மாடுகளின் இரத்தத்தை உறிஞ்சும் பூச்சிகள், உண்ணிகள் என்பனவற்றை இவை கொத்தி உண்பதால் மாட்டின் ஆரோக்கியத்திற்கு இக்கொக்கினம் உதவி புரிகின்றது. அத்துடன் குளக்கரைகளில் முதலைகள் வாயை விரித்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் சமயங்களில் வாயிலுள்ள அழுக்குகளை இக்கொக்குகள் கொத்தித் தூய்மைப்படுத்துகின்றது. இக் கொக்குகளின் இறகுகளில் செம்மஞ்சள் நிறம் கலந்து காணப்படும்.

கிராமப்புறங்களில் 'குருட்டுக் கொக்கு' என அழைக்கப்படும் ஒரு வகைக் கொக்கினம் காணப்படுகின்றது. இவை நெல்வயற் பகுதிகளில் அதிகம் காணப்படுவதினால் வயற் கொக்கு எனவும் அழைப்பர். இவை வயல்களில் நீண்ட நேரம் ஆடாமல் அசையாமல் நின்று தமக்கான உணவை உட்கொள்ளவல்லன. இவற்றின் இறகுகள் சாம்பல் நிறத்தில் காணப்படும். இவை தவளை, பூரான், நண்டு, மீன் மற்றும் நெற்கதிர்களில் உள்ள தட்டான்கள் என்பனவற்றைப் பிடித்து உண்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கினங்களில் 'சாரசக் கொக்கு' எனப்படும் கொக்கு இனமே பெரியது. இது நிற்கும் பொழுது 5அடி உயரம் உடையது. இதன் கழுத்தைச் சுற்றிக் கருஞ்சிவப்பு நிறப் பட்டை காணப்படும். இவ்வகைக் கொக்குகள் உணவுத் தேடலுக்காய் நீண்ட தூரம் செல்லவல்லன. இக்கொக்கினம் ஒரு துணையுடனேயே வாழும். ஒன்று இறந்துவிட்டால் மற்றையதும் இறந்து விடுமாம். இக்கொக்குகளில் ஆண், பெண் இரண்டுமே முட்டைகளை அடை காக்கின்றன. அத்துடன் குஞ்சுகளைப் பராமரிப்பதிலும் இணைந்தே செயற்படுகின்றன. இக்கொக்கினங்கள் யூலை முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியிலேயே தமது இனப்பெருக்கத்தை மேற்கொள்கின்றன. இவை பாம்புகள், சிறுஉயிரினங்கள், தானிய வகைகள் என்பனவற்றை உணவாக உட்கொள்கின்றன.

கொக்கு வகைகளில் இன்னொரு வகை 'சாண்ட்ஹில் கொக்குகள்' இவை கூட்டமாக இடம் பெயர்கின்றன. இவை இணை சேரும்போது ஆடும் நடனம் மயில் நடனத்தைப் போல அழகானது.

---



# சிவகுருநாதன்

பிறக்கும்பொழுதே இரு கைகளும் இரு கால்களும் இல்லாமல் பிறந்தவர் எஸ்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி. ஊனம் என்ற சுட்டுதலிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட நம்பிக்கைக் கதையையும் இசை என்ற இறைக்கரத்தின் வழியாக தனது தாழ்வுணர்ச்சியிலிருந்து மீண்டெமுந்த மீட்பு வரலாற்றையும் இன்று உலகம் அறிகிற முன்னுதாரணமாக மாறி நிற்கும் பேரெழுகையையும் தன் கருணைக் குரல் வழியாகச் சொல்கிறார் கிருஷ்ண மூர்த்தி அய்யா.

குக்கூவுக்கும் கிருஷ்ணமூர்த்தி ஐயாவுக்குமான உறவு என்பது இருபது வருடங்களுக்கு முன்பு துவங்கிய ஒரு அருநிகழ்வு. முதன் முதலாக குக்கூவின் செயலசைவு துவங்கப்பட்ட நிகழ்வானது ஐயாவின் அருட்குரலால் துதிபாடியே துவங்கப்பட்டது.

சுயகல்வியைத் தேடி – கல்வி ஆவணப் பதிவின் நான்காம் காணொலி, கிருஷ்ணமூர்த்தி அய்யா அவர்களின் தன் வாழ்வுக் கதையாக அவருடைய சுயமொழிதலில் சிற்றுரையாக வெளியாகியுள்ளது.

'எக்குறை நேரினும் எமக்கிறையே துணை' என நெக்குருகித் துதிக்கும் இவருடைய குரல்வளை, இசை பயிலும் குழந்தைகளுக்கான தீரா அகவிசை. எழுபது வயது கனிந்திருக்கும் அய்யாவுடைய நற்சொல் ஒவ்வொன்றும் நமக்கான நல்லாசிகள்.

கை,கால்களற்ற ஒரு மனிதர், தான் பெற்ற இவ்வாழ்வுக்காக தெய்வத்துக்கு நன்றியுரைக்கிறார் என்றால், அவர் தன் வாழ்வுக்குப் பொருள்கொண்ட விதம் எத்துணை மகத்துவமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுங்கள்/ வெல்லுங்கள்

## போட்டி இல. 29 வினாக்கள்

- **தமிழ்**

01. உயிர் எழுத்துக்கள் எத்தனை?
02. நளவெண்பாவின் ஆசிரியர் பெயர் என்ன?
03. தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள் யாவர்?

- **பொது அறிவு**

04. உலகிலேயே மிகப் பெரிய பறவை எது?
05. அதிகூடிய மக்கள் தொகை கொண்ட நாடு எது?
06. இலங்கையின் தற்போதைய பிரதமரின் பெயர் என்ன?

- **மாற்றுத் திறனாளிகள்**

07. சர்வதேச மனநலிவு (டவுன் சிண்ட்ரோம்) தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
08. ஓட்டிசம் என்ற பதம் எப்போது? யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
09. கேட்டல். பார்வைப் புலன்கள் முற்றாகப் பாதிக்கப்பட்ட அதேவேளை பேச்சுத் திறனும் குன்றியிருந்த ஹெலன் கெல்லர் இக்குறைபாடுகளுடன் பயின்று உலகின் விழிப்புல. செவிப்புலன் அற்ற முதல் பட்டதாரி என்ற பெருமையைத் தனதாக்கினார். இப்பட்டம் எப்போது இவருக்கு வழங்கப்பட்டது?
10. இலங்கையில் முதல் முதலாக விழிப்புலன் அற்றவர்களுக்கான விடுதிப் பாடசாலை எப்போது எங்கே ஆரம்பிக்கப்பட்டது?

**இவ்வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி அனுப்பி வையுங்கள்.விடைகள் எமக்குக் கிடைக்க வேண்டிய இறுதிநாள் யூலை 15.2021 இவ் விடைகளுடன் உங்கள் சுயவிபரத்தையும் (முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த ஆண்டு) இணைத்து சரியான விடைகளை எழுதி அனுப்பி வையுங்கள். அனுப்புவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில் வழங்கப்படும்.**

# எழுதுங்கள்; வெல்லுங்கள்

## போட்டி இல. 29 விடைகள்

**01.** ..............................................
**02.** ..............................................
**03.** ..............................................
**04.** ..............................................
**05.** ..............................................
**06.** ..............................................
**07.** ..............................................
**08.** ..............................................
**09.** ..............................................
**10.** ..............................................

## போட்டி இல:28 விடைகள்

01. ஆண்மான்
02. எதிர்ப்பு
03. ஹம்மிங் பறவை
04. மோகனதாஸ் காந்தி
05. ஜாகார்த்தா
06. 1770ஆம் ஆண்டு ஜேர்மனியிலுள்ள பான் (Bonn) நகரில்
07. சுதாச்சந்திரன்
08. ஏப்ரல் 02
09. 2006
10. 1956




1. முழுப் பெயர் : ..............................................
2. தபால் முகவரி : ..............................................
..............................................
3. தொலைபேசி இல. : ..............................................
4. பிறந்த ஆண்டு/மாதம்/திகதி : ..............................................

**அனுப்ப வேண்டிய முகவரி:** எழுதுங்கள்; வெல்லுங்கள்
கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம்,
இல: 290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்து மல்லிகை

நேர்காணல் : கணபதி சர்வானந்தா

# வலுக் கொடுக்கும் ஒரு நிறுவனத்தின் முகாமையாளராக

## குமரவேள் கந்தசாமி



திரு. கந்தசாமி குமரவேள்

*"ஆரம்பத்தில் கைகளால் இயக்குகின்ற முச்சக்கர வண்டியில் பாடசாலைக் கல்வி... பின்னர் தனக்கென வடிவமைக்கப்பட்ட முச்சக்கர மோட்டார் வாகனத்தில் பல்கலைக்கழகம். தற்போது தனக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட முச்சக்கர 'ஓட்டோ' வண்டியில் காரியாலயப் பணி.... எனத் தனக்கேற்றவாறு போக்குவரத்து வசதிகளை மட்டுமல்ல தனது வாழ்க்கையையும் வடிவமைத்துக் கொண்டவர் குமரவேள் கந்தசாமி. அவர் சிறந்த நிர்வாகி மட்டுமல்ல சிறந்த பண்பாளரும் கூட."*

ஒரு பொறுப்புள்ள அதிகாரியாகப் பணியாற்றுகிறார் கந்தசாமி குமரவேள். காலை எட்டு மணிக்கு முன்பாகத் தமது அன்றாடக் கடமைகளை முடித்துக் கொண்டு காரியாலயத்துக்குப் புறப்பட்டு விடு வார். அவர் காரியாலயத்துக்குப் போய் வருவதற்காக ஒரு முச்சக்கர வண்டியினைப் பயன்படுத்துகிறார். தானே அதனைச் செலுத்துகிறார். இவர் சமூகத்துக்கு முன்னு தாரணமானவர். அது மட்டுமல்லாமல் வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ளவர்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு பொறுப்புள்ள சமூக சேவைசார்ந்த பணிகளில் முக்கிய அதிகாரியாகப் பணியாற்றுகிறார். தனக்குத் தொழில் என்ற விடயத்துக்கு அப்பால் அந்தப் பணி ஆன்ம திருப்தியைத் தருவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

உடுவில் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளராகப் பணியாற்றுகின்ற திரு.கந்தசாமி குமரவேள் அவர்களை வலு சஞ்சிக்காகச் சந்தித்துக் கலந்துரையாடினோம். 'வலு' சஞ்சிகையோடு அவர் பகிர்ந்து கொண்ட அனுபவங்கள் நிச்சயமாகக் கருவி அங்கத்தவர்களுக்கு வலுவூட்டும் ஔடதமாக இருக்கும் என்று மனப்பூர்வ மாக நம்புகிறோம்.

பல கல்விப் பெருந்தகைகளை உருவாக்கிய பெருமைக்குரிய இணுவில் கிராமத தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை இணுவில் மத்திய கல்லூரியில் பெற்றுக் கொண்டார். உயர்தரம் வரை அங்கேயே தனது கல்வியைத் தொடர்ந்தவர். உயர் தரத்தில் சித்தி பெற்ற பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானார்.

பிறப்பிலே மிகவும் ஆரோக்கியமுள்ள குழந்தையாகப் பிறந்தவர். அவரது இரண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டரை வயதில் கொடிய இளம்பிள்ளை வாதத் தினால் பீடிக்கப்பட்டார். சிகிச்சை பல செய்தும் பலனளிக்கவில்லை. இருந்தும் மனதிலே வலுவை அதிகரித்துக் கொண்ட ஒரு மாற்றுத் திறனாளி இவர். தனது சுய முயற்சியினால் கல்வியைத் தொடர்ந்தவர். பாடசாலைக் கல்வியை மட்டும் வளமாகக் கொண்டு சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றார். இணுவில் மத்திய கல்லூரியி லேயே கலைப் பிரிவில் உயர் தரத்தைத் தொடர்ந்தார். அங்கு தனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் அதிக கவனமெடுத்து சகல பாடங்களையும் கற்பித்ததாகச் சொல்லுகிறார். அவர்கள் துணையோடு உயர்தரத்தில் சித்தி பெற்றார் என்பதை நன்றியோடு குறிப்பிடுகிறார் குமரவேள்.

பின்னர் 1992இல் யாழ். பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பட்டதாரிக்கான படிப்பைத் தொடர்ந்தவருக்குப் பல்கலைச் சமூகம் அதிக கவனமெடுத்ததாகவும் அவர் சுட்டிக் காட்டினார். மாடிப்படிகளில் ஏறிச் செல்ல முடியாத சூழலில் கட்டடத்தின் கீழ்ப் பகுதிலேயே வகுப்புகளை ஒழுங்கு படுத்தியதாகச் சொல்லுகிறார். அப்படி மாடி வகுப்பறைகளில் ஏறிச் செல்ல வேண்டி நேர்ந்த சந்தர்ப்பங் களில் எல்லாம் அவரது சக மாணவர்கள் அவருக்கு உறுதுணை யாக நின்றதாகச் சொன்ன குமரவேள், அவற்றுள் அப்போது வணிக பீடத் தலை வராக இருந்த பேராசிரியர் தேவராஜா அவர்கள் தனது விடயத்தில் அதிக அக்கறை கொண்டிருந்தார் என்று சொல்லி நன்றி யோடு அவர்கள் அனை வரையும் நினைவு கூர்ந்தார். சமூகத்தில் அக்கறையுள்ள நல்ல மனிதர்கள் பலரைச் சந்திக்கின்ற வாய்ப் பைத் தான் பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொண்டார் எனவும் அதே போல இன்றும் தனது திணைக்கள சக ஊழியர்கள் தனது கடமைகளைச் செய்வதில் உறு துணையாக இருப்பதோடு காரியாலயப் பணிக்கு அப்பா லும் அவர்கள் தனக்கு உதவுவதாகவும் சொல்கிறார்.

2000ஆம் ஆண்டில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பணியில் இணைந்து கொண்டார். சாதாரணமான நடைமுறையி லேயே தான் வேலைக்காக விண்ணப்பித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்முகத்தை எதிர்கோண்டு இந்தப் பதவியைப் பெற்றதாகச் சொல்லுகிறார்.

ஒரு மாற்றுத் திறனாளி என்ற வகையில் அங்கு உங்களுக்கு ஏதாவது முன்னுரிமை அளிக்கப்பட்டதா? என்று கேட்டேன். "இல்லை! வழமையான நடைமுறைகளி னூடாகவே இந்தப் பணிக்கு விண்ணப் பித்தேன். எனது கல்வித் தகைமைகளை அடிப்படையாகக் கொண்டு தான் அப்பத வியைப் பெற்றுக் கொண்டேன்." என்று சொல்லிப் பெருமைப் படுகிறார் குமரவேள்.

தான் ஒரு மாற்றுத் திறனாளி என்பதை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உணர்ந்து கொண்டதாக இல்லை என்று சொல்லும் குமரவேள் தனக்கு சமுர்த்தித் திணைக் களத்தில் கிடைத்த இந்தப் பணியை மிகவும் விருப்புடனும் சந்தோஷத்துடனும் செய்வ தாகவும் ஒரு பணி என்ற விடயத்துக்கு அப்பால் சமூகத்துக்குச் சேவை செய்யக் கிடைத்த வாய்ப்பாகவே தான் இதனைக் கருதுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். குறிப்பாக இங்கே உதவிகளைக் கேட்டு வரு பவர்கள் மனோநிலையைப் புரிந்து கொள் ளக் கூடியதாகவும், அவர்கள் தேவையை அறிந்து அவர்களுக்கு உதவத் தன்னால் முடிவதற்கு தான் பெற்ற அனுபவம் துணை யாக இருப்பதாகக் குறிப்பிட்டு அவர் தனது கடமை உணர்வை வெளிப்படுத்தினார்.

சாதாரண ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். 2009 இல் இணுவிலைச் சேர்ந்த சசிகலா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அவருக்குத் தற்போது மூன்று பிள்ளைகள். அவற்றில் இரண்டு பெண்கள் ஒருவர் ஆண் பிள்ளை. மூவரும் பாட சாலையில் கல்வி கற்று வருகிறார்கள். அவர் களுக்குக் கல்வியைச் சொல்லிக் கொடுத்து அவர்களை சமூகத்திலே நற்பிரஜைகளாக்க வேண்டும் என்பதே தனது நோக்கம் என்றும் தனது ஓய்வுநேரத்தை



அவர்களுக்காகவேதான் பயன்படுத்துவ தாகவும் குமரவேள் சொல்லுகிறார்.

2018ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிதேச செயலகத்திலிருந்து உடுவில் பிரதேச செயல கத்துக்கு மாற்றலாகி வந்தவர். இன்னும் அங்கேயே அவரது பணிகளைத் தொடர் கிறார்.

"எனது வலுவிழப்பை ஒரு குறையாகப் பார்க்கவில்லை. அதற்கூடாக நான் கற்றுக் கொண்டவை அதிகம். பல கோணங்களில் சமூகத்தை விளங்கிக் கொள்ள அது ஏதுவாக இருந்ததோடு ஆன்ம பலமே ஒரு மனித னுக்கு இருக்க வேண்டிய அதிக பலம் என்ற உண்மையையும் நான் கற்றுக் கொண் டேன். அதனை வெகுமதிமிக்கதாக நான் கருதுகிறேன்." என்கிறார் குமரவேள்.

அவரைப் போல நம்பிக்கையை ஊன்றி அனைவரும் மேல் எழ வேண்டும் என்பதே வலுவின் நோக்கம். வலுவுக்கூடாக அதனையே வலியுறுத்த விரும்பும் கருவி நிறுவனத்தின் சமூகப் பணியும் பொறுப்பும் அதனை மேன்மேலும் வலுப்படுத்த முனை கிறது. இந்த இடர் நிறைந்த காலத்திலும் பல மில்லியன் பெறுமதியான சமூகப் பணி களைக் கருவி முன்னெடுத்திருப்பதை அதற்குச் சான்றாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

# நவீன தொழில்நுட்ப மாற்றங்கள்

அண்மைக் காலத்தில் நவீன தொழில் நுட்பமானது துரித வளர்ச்சியினைக் கண்டு வருகின்றது. மனித வாழ்வை மிக இலகு வாக்கியுள்ள இத்தொழில்நுட்ப வளர்ச்சி அன்றாட வாழ்வில் இடர்படும் மாற்றுத் திறனாளிகளுக்குக் கைகொடுத்தால் அது அவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். இந்த வகையில் சில கண்டுபிடிப்புக்கள் மாற் றுத் திறனாளிகள் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்துமாயின் அது அனைவருக்கும் உகந்த தாக அமையும்.


பொதுவாக மனிதர்கள் பல்வேறு துறை களில் ஆர்வம் மிக்கவர்களாகக் காணப்படு கின்றனர். இதில் ஒரு பகுதியினர் விளை யாட்டுப் பிரியர்கள். இவர்களில் மாற்றுத் திற னாளிகளும் உள்ளனர். இவர்களின் விளையாட்டுத் திறனை வெளிக்கொணரும் நோக்குடன் அவ்வப்போது உலகளாவிய ரீதியில் பல போட்டிகள் நடாத்தப்படுகின்றன. இதில் சைபத்லான் எனப்படும் மாற்றுத் திற னாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியும் உண்டு.

இப்போட்டியில் உடல் அங்கங்களை இழந்த மாற்றுத் திறனாளிகள் செயற்கை உறுப்புக்களோடும் உதவு கருவிகளோடும், இயந்திர மனிதர்கள் எனப்படும் ரோபோக்க ளோடும் பங்குபற்றுவது சிறப்பம்சமாகும். இப்போட்டிகளின் மற்றுமொரு சிறப்பம்சம் யாதெனில் மாற்றுத் திறனாளிகள் தினசரி பயன்படுத்தும் உதவி உபகரணங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கான தளமாக வும் அமைவது தான். இப்போட்டியில் பங்குபற்றும் மாற்றுத் திறனாளிகள் சைபத்ற றுக்கள் என்று அழைக்கப்படுவர்.

இறுதியாக இச்சைபத்லான் போட்டிகள் கடந்த 2020ஆம் ஆண்டு சுவிற்சலாந்தில் சூரிச் நகரில் இடம்பெற இருந்தது. ஆனால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கோவிட்-19 எனப்படும் வைரஸ் தொற்றுக் காரணமாக குறித்த இடத்தில் இப்போட்டிகளை நடத்த முடியாமல் போய்விட்டது. எனினும் இப் போட்டிகள் நவீன தொழில்நுட்பத்தினூடாக நடத்தி முடிக்கப்பட்டது. இதற்கென பங்குபற் றும் வீரர்களுக்கும் மேற்பார்வையாளர்க ளுக்குமான பயிற்சிகள் குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைப்பினரால் பிரத்தியேகமாக வழங்கப் பட்டது. இப்போட்டியில் 51 சர்வதேச அணி கள் பங்குபற்றின. இவர்களுக்கான போட்டிகள் அவர்களது தாய் நாடுகளிலேயே நடத்தப்பட்டன.

இப்போட்டிகளின் வெற்றித் தேர்வானது 06 அடிப்படை விடயங்களை உள்ளடக்கி யுள்ளது. மிகக் குறைந்த நேரத்தில் தடை களைத் தாண்டுதல், குறைந்த அபராதத்தில் முடிவுகளை மேற்கொள்ளல் என்பனவும் உள்ளடங்கும்.

போட்டிகள் முடிவடைந்த பின் ஆவணங் கள் சூரிச் நகர விளையாட்டு அரங்குக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்பு அவை நேரலையில் ஒளிபரப்பப்பட்டன. இது நேரலையில் நடந்த போட்டியைப் போலவே அமைந்தது.

இப்போட்டிக்கான ஒழுங்கமைப்புக்கள் பற்றி நோக்குமிடத்து இப்போட்டியில் பங்கு பற்றிய போட்டியாளர்கள் பல்வேறு நாடுகளி லிருந்து பங்குபற்றியிருந்தனர். எனவே எல்லோருக்கும் ஒரே மாதிரியான சூழலை உருவாக்க வேண்டிய நிலை இருந்தது. அதற்கேற்றால் போல் முடிக்க வேண்டிய பணிகள், விளையாட்டை நடத்துவது தொடர் பான நடைமுறைகள் என்பன முதல்கட்டத் தில் முடிவு செய்யப்பட்டன. பின்னர் அடுத்த கட்டமாக எல்லோரும் விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கு ஒரு வழிமுறை தேவைப்ப ட்டதனால் உலகம் முழுவதிலும் இருந்து நடுவர்கள் தெரிவு செய்யப்பட்டு, காணொளி மூலமாகப் பயிற்றப்பட்டு தேர்ந்தெடுக்கப் பட்டனர். இதனூடாக போட்டியாளர்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்குத் தயார்படுத்தப்பட்டனர்.

பங்குபற்றிய அணிகளுக்கு ஒவ்வொரு நாளிலும் முடிக்க வேண்டிய பணிகள் சற்று சவால் நிறைந்ததாகவே இருந்தன. மின் சாரத்தில் இயங்கும் சக்கரநாற்காலிகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் கரடுமுரடான பாதைகள் மற்றும் படிக்கட்டு என்பவற்றைத் தாண்டி குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளுக்காக நடத்தப் படும் இச்சைபத்லான் போட்டி தொழில்நுட்ப வல்லுநர்கள் புதிய கண்டுபிடிப்புக்களை கண்டுபிடிக்க உந்துசக்தியாக இருக்கின் றது. தொழில்நுட்ப ஆர்வலர் ஒருவர் மாண வனாக இருந்தபோது தன் கற்கை நெறிக் காக படிகளில் ஏறக்கூடிய ரோபோ ஒன் றினை வடிவமைத்தார். 2016ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைபத்லான் போட்டி அவருக்கு ஒரு புதிய ஆர்வத்தை ஏற்படுத்தியது. இதன்போது இவர் அந்த ரோபோவில் இருக்கை ஒன்றைப் பொருத்தி படிகளில் ஏறும் சக்கர நாற்காலியை உருவாக்கினார். இப்போட்டியில் அவரது தொழில்நுட்பம் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்காத போதிலும் பின்னர் அவர் தனது தொழில்நுட்ப நிறுவனத்தினூடாக இதனைப் மேம்படுத்தி படிகளில் ஏறக்கூடிய சக்கரநாற்காலியை உருவாக்கினார். இதனை பயன்படுத்தும் மாற்றுத் திறனாளி ஒருவர் "நான் விபத்து ஒன்றில் பாதிக்கப்பட்டதன் காரணமாக நீண்டகாலமாக எனது வாழ்க்கை சக்கரநாற்காலியிலேயே நகர்ந்தது. எனக்கு மாடிப்படிகளில் ஏற வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் இவ்வளவு நாட்களாக அது என்னால் முடியவில்லை இப்போது இந்த தொழில்நுட்பம் மூலம் என்னால் மாடிப் படிகளில் ஏற முடிந்துள்ளது. இது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது." என்கின்றார். இத் தொழில்நுட்பச் சாதனமானது அதிகளவில் பாவனைக்கு வரும்பொழுது பாதிப்புள்ள மாற்றுத் திறனாளிகளுக்குப் பெரிதும் துணை புரியும் என நம்பலாம்.

இப்போட்டிகளால் கவரப்பட்ட தொழில்நுட்ப ஆர்வலர் ஒருவர் தயாரித்த ஒரு கருவிதான் மின்கலத்தில் இயங்கும் செயற்கை கை. இதனைப் பயன்படுத்திய ஒரு மாற்றுத் திறனாளி "இதனைப் பயன்படுத்து வதனூடாக என்னால் காய்கறிகளை வெட்ட முடிகிறது. மின்குமிழ்களை பொருத்த முடிகிறது. உடுப்புக்களை உலர்த்த முடிகிறது" என கூறி மகிழ்கின்றார்.

இப் போட்டிகள் பல தொழில்நுட்ப ஆர்வலர்களுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான உதவு கருவிகளைக் கண்டுபிடிக்க களம் அமைத்துக் கொடுத்துள்ளது. 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற இப்போட்டியில் பல புதிய உதவு கருவிகளைப் பயன்படுத்தி மாற்றுத் திறனாளிகள் தங்கள் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தியிருந்தனர். இக் கருவிகள் பங்குபற்றிய விளையாட்டு வீரர்களைத் தாண்டிப் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிடைக்கும்பொழுது அவர்களது அன்றாட வாழ்க்கை ஒளிமயமானதாக அமையும்.

இப்போட்டி ஏற்பாட்டாளர்களின் நோக்கங்களில் ஒன்று தொழில்நுட்ப ஆர்வலர்களின் கவனத்தை மேலும் தூண்டி மாற்றுத் திறனாளிகளுக்கான உதவு கருவிகளை கண்டுபிடித்துப் பயன்படுத்தச் செய்வதுடன் அவர்களுக்கான தேவைகளை வெளிக் கொணர்வதும் அவர்கள் எதிர்நோக்கும் தடைகளைத் தொழில்நுட்பத்தினூடாக வெற்றி கொள்வதைச் சாத்தியமாக்குவது மாகும்.

எது எப்படியிருப்பினும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சி மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மாற்றங்களை எற்படுத்துமாயின் அது அனைவராலும் வரவேற்கப்படும் என்பது திண்ணம்.

தொடரும்...

நாகீ - ஆதாரம்- BBC தமிழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சுதாமதி தயாபரன்,
சாவகச்சேரி.

# முயன்றால் முடியாதது எதுவுமில்லை

அன்றொரு நாள் ஒரு பெரியவர் என்னைச் சந்தித்து அடுத்த வாரம் நகர்ப் பகுதியிலே கொரோனா விழிப்புணர்வுக் கருத்தரங்கு சமூக இடைவெளியை வலியுறுத்தி நடைபெறவுள்ளது. அதிலே நீயும் கலந்து கொண்டால் மிகவும் பயனுடையதாக இருக்கும். இக்கருத்தரங்கு ஐம்பது பேருக்கே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனை நான் தான் ஒழுங்கமைத்து நெறிப்படுத்தி அனுமதிப் பிரவேசச் சீட்டு வழங்குகின்றேன். நீ நாற்பதாவது நபர், என்றார். நானோ வரமுடியாது எனச் சோம்பலுற்றபோது அவர் எனக்கு ஒரு கதையைக் கூறினார். அதாவது நான் கூறுவதைக் கேள்; கேட்டுவிட்டு பதில் கூறு என்றார்.

கமலனும், நிமலனும் இணை பிரியாத நண்பர்கள்; கமலன் கண்பார்வையற்றவர். அதே போல் நிமலன் நடக்க முடியாதவர். இதனிடையே இருவருக்கும் தாய், தந்தையர், சுற்றத்தவர்கள் எவரும் கிடையாது. இருவரும் பெரியவர்களிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் வாழ்ந்து வந்த கிராமத்தில் கிடைக்கின்ற இலகுவான வேலைகளைச் செய்து கொண்டு கிராமத்தில் உள்ளோர் அன்போடு பரிமாறுகின்ற உணவுகளை உண்டு வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில் அயலூரில் நடக்கும் திருவிழா பற்றித் தெரிய வந்தது. இறை பக்தியும் கலைகள் மீதான ஆர்வமும் இயல்பாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உன்னால் நடக்கத்தான் முடியாது வெகுதூரம் என்னால் நிதானமாக நடக்க முடியும். ஆகவே நீ சக்கர நாற்காலிமீது ஏறி உட்கார்ந்து கொள் எனக்கு வழி காட்டு. போக வேண்டிய பாதையைச் சொல்லிக் கொண்டே வா. நாம் இருவரும் திருவிழாவுக்குச் சென்றுவர முடியும் என்றான்..



இருவருக்கும் இருந்த காரணத்தால் அங்கே போக வேண்டும் என்ற உந்துதல் மனதுள் எழுந்தது. அங்கே செல்ல முடிவெடுத்தார்கள். ஆனால் அயலூரை மிக விரைவாக அடைந்து விட முடியாது. நீண்ட நேரம் நடக்க வேண்டும். நிமலனுக்கு இந்த விடயம் சோர்வையும் சலிப்பையும் தந்தது. கமலனை அழைத்து என்னாலோ நடக்க முடியாது உன்னாலோ பார்க்க முடியாது; இந்த இலட்சணத்தில் நமக்கு ஏன் இந்த விபரீத ஆசை..? என்று சொன்னான்.

நிமலன் சொன்னவற்றைச் செவி மடுத்த கமலன் சிறிது நேரம் தீவிரமாக யோசித்து விட்டுச் சொன்னான். நண்பா! நீ ஒரு விடயத்தைச் சற்றே சிந்தித்துப் பார். உன்னால் நடக்கத்தான் முடியாது. வெகுதூரம் என்னால் நிதானமாக நடக்க முடியும். ஆகவே நீ சக்கர நாற்காலிமீது ஏறி உட்கார்ந்து கொள். எனக்கு வழி காட்டு. போக வேண்டிய பாதையைச் சொல்லிக் கொண்டே வா. நாம் இருவரும் திருவிழாவுக்குச் சென்று வர முடியும் என்றான்.

நிமலனும் முழு மனதோடு கமலன் சொன்னவற்றை ஏற்றுக் கொண்டான். ஒற்றுமையாகப் பயணத்தை மேற்கொண்டு திருவிழாவுக்குச் சென்று வந்தார்கள்...! ஆகவே நம்முடைய பலம் எது என்பதை எப்பொழுதும் தெரிந்திருப்பது அவசியம். அதைத் தகுந்த சமயத்தில் உபயோகிக்கத் தெரிய வேண்டியதும் அவசியம். அதேபோன்று ஏன் நம்மால் ஒரு காரியத்தைச் சாதிக்க முடியாது என்று யோசித்துக் கொண்டிருப்பதை விட எப்படி அந்தக் காரியத்தை இலகுவாகச் சாதிக்க முடியும் என்று முயற்சிப்பது அதிக பயனையும் அடைவதற்கான தூண்டுதலையும் தரும். இவை தவிர மிகப் பிரதானமாக அடுத்தவர்களுடைய பலம் நமக்குப் பயன் தர வேண்டுமானால் அவர்களுக்குத் தேவையான பயன்களை அவர்களுக்கு மனமுவந்து வழங்கத் தயாராக இருக்க வேண்டும். உதவிகளைச் செய்யத் தயங்கக் கூடாது. முயன்றால் முடியாதது எதுவுமில்லை எதனையும் நேர் சிந்தனையோடு பயணித்துச் சாதிக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனப் பெரியவர் எடுத்துரைத்தபோதே நானும் உணர்ந்து கொண்டேன். 'எமது வாழ்க்கை நம் கையில்' என்பதை ஏற்றுக் கொண்டேன். பின்பு கொரோனா விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பங்குபற்றினேன். அங்கு கருத்தரங்கை நெறிப்படுத்திய சுகாதாரப் பரிசோதகர் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மேலும் கொரோனாத் தாக்கத்திலிருந்து விடுபடவும் "நம் வாழ்க்கை நம் கையில்" என்ற வாசகம் மிகப் பொருத்தமானது என்பதை விளங்கிக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்கள் காணும் மௌன மொழி!

உங்கள் தாய்மொழியை எப்படி கற்றுக் கொண்டீர்கள்? சின்னக் குழந்தையில் இருந்தே வீட்டில் உள்ளவர்களும் நண்பர்களும் பேசுவதைக் கேட்டுக் கற்றுக் கொண்டேன் என நீங்கள் ஒருவேளை சொல்லலாம். காதால் கேட்டும் வாயால் பேசியுமே நாம் பெரும்பாலும் மொழியைக் கற்றுக் கொள்கின்றோம். செவித்திறனுள்ள நம் கருத்துக்களும் எண்ணங்களும் மனதில் உருவாகும்போது அவற்றை எப்படிச் சொல்வதென்று உடனடியாக மனதில் பேசிப் பார்த்துக் கொள்கின்றோம். ஆனால் பிறவியிலேயே ஒரு பிள்ளை காது கேட்காமல் இருந்தால்..? மனம் வேறு விதமாக யோசனைகளை உருவாக்குமா? கண்ணுக்குப் புலப்படாதவையும் புலப்படுபவையுமான விஷயங்களை ஒரு மனதிலிருந்து இன்னொன்றுக்குக் கடத்தும் மௌன மொழி ஏதாவது உண்டா?

**கண்ணோடு பேசும் காதோடு அல்ல**

மொழியைக் கற்றுக் கொண்டு அதைப் பயன்படுத்தும் திறன் மனித மூளையின் அதிசயங்களில் ஒன்றாகும். ஆனால் மொழியைக் கேட்க முடியாதபோது கண்களால் மட்டுமே அதை உணர்ந்து கொள்ள முடிகிறது. காதுகளுக்கு வேலையில்லாமல் போகிறது. சந்தோஷமான விஷயம் என்னவென்றால், மற்றவர்களோடு பேச வேண்டும் என்ற அடக்க முடியாத ஆசை மனிதனுக்கு இருப்பதால் எவ்வித தடைகளையும் அவனால் மீற முடிகிறது. அந்த ஆசையினாலேயே காது கேளாதவர்களும் பலவித சைகை மொழிகளை உலகெங்கும் உருவாக்கியிருக்கின்றனர். ஒருவேளை அவர்களது குடும்பத்தினரும் காது கேளாதோராய் இருந்திருக்கலாம். இல்லையேல் விசேட பள்ளிகளிலோ சமூதாயத்திலோ மற்றவர்களோடு சேர்ந்து வளர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியிருக்கலாம். ஆகவே அவர்கள் பலரோடு பழக வேண்டி இந்திருக்கிறது. இப்படியாக உதயமானது தான் கண் களுக்காவே உருவாக்கப்பட்ட சிக்கலான ஒரு மொழி, அதாவது சைகை மொழி. அமெரிக்காவைச் சேர்ந்த கார்ல் என்பவ ருக்கு இந்த மொழியைப் பரிசாக அளித்த வர்கள் காது கேளாதவர்களாயிருந்த அவரது அம்மாவும் அப்பாவுமே. அவர் பிறவியி லேயே காது கேளாதவராக இருந்தா லும் பிஞ்சுப் பருவத்திலேயே அவரால் பொருட் களைச் சரியாக அடையாளம் காண் பிக்க முடிந்தது; சைகைகளை கோர்வை யாக விளங்க முடிந்தது.

அமெரிக்க சைகை மொழியில் (ASL) கண்ணுக்குப் புலப்படாத எண்ணங்களை யும் கூட தெரிவிக்க முடிந்தது. காது கேளாத பெற்றோர்கள் சைகையில் பேசும்போது அவர்களது காது கேளாத குழந்தைகள் பெரும்பாலும் 10 - 12 மாதங்களுக்குள் சைகை செய்ய ஆரம்பிக்கின்றன. 'காது கேளாதவர்' உலகிற்கு ஒரு பயணம் என்ற ஆங்கில புத்தகத்தில் இயல்பாகவே ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதற்கும் பின் தன் பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவ தற்கும் மனிதன் பெற்றிருக்கும் ஆற்றல் அவனது மூளையில் வேரூன்றியிருக்கிறது என மொழி வல்லுநர்கள் இப்போது புரிந்து கொண்டிருக்கின்றனர். அந்த ஆற்றல் வெளிப்படுவது ஊமை மொழியிலா, பேசும் மொழியிலா? என்பது ஒரு பொருட்டே அல்ல" என விளக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவில் மூன்று தலைமுறையாகச் காதுகேளாதவராய் இருக்கும் ஒரு குடும்பத் தில் ஸ்வேதா பிறந்த நாள். காதுகேளாத தனது சகோதரனுடன் சேர்ந்து அவளும் ரஷ்ய சைகை மொழியைக் கற்றுக் கொண் டாள். மூன்று வயதில் காது கேளாதவருக் கான பள்ளியில் சேர்க்கப்படும்போதே அவளுக்கு சைகை மொழி வைத்திருந்தது. அவள் சொல்கிறாள். "எங்க ஸ்கூலில் இருந்த மற்றப் பிள்ளைகளுக்கு சைகை மொழியே தெரியவில்லை. என்னிடமிருந்து தான் கற்றுக் கொள்வார்கள்" அநேக காது கேளாத பிள்ளைகளின் பெற்றோர்கள் செவி ஆற்றல் உள்ளவர்கள் அவர்கள் சைகை மொழியைப் பயன்படுத்தவில்லை. அம் மொழியை பெரிய பிள்ளைகள் சிறிய பிள்ளைகளுக்கு பள்ளியில் கற்றுக் கொடுத்த னர். அவர்களும் காது கேளாதவர்கள் என்பதால் தொடர்பு கொள்வது சுலபம்.

இன்று செவி ஆற்றலுள்ள அநேகமான பெற்றோர்கள் காது கேளாத தங்கள் பிள்ளை களோடு பேசுவதற்காக சைகை மொழியைக் கற்றுக் கொள்கின்றனர். அதன் காரணமாக காது கேளாத பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வ தற்கு முன்பாகவே திறம்படப் பேசக் கற்றுக் கொள்கிறார்கள். கனடாவில் வசிக்கும் ஆண்ட்ரூவின் விஷயத்தில் இது உண்மை யாக இருந்தது. அவனது பெற்றோர் செவி ஆற்றல் உள்ளவர்கள், அவர்கள் சைகை மொழியைக் கற்றுக்கொண்டு சிறுவயதில் இருந்தே அவனோடு பேச ஆரம்பித்தார்கள். இப்படியாக காலப்போக்கில் மொழித்திறனை வளர்த்துக் கொள்வதற்கு அவனுக்கு ஒரு அஸ்திவாரம் கிடைத்தது. இப்போது எந்த விஷயமாக இருந்தாலும் சரி முழுக் குடும் பத்தாரும் சுலபமாக சைகை மொழியில் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ள முடி கிறது. காது கேளாதவர்களால் கண்ணுக்குப் புலப்படுபவையும் புலப்படாதவையுமான எல்லாவித எண்ணங்களையும் முறையாக யோசிக்க முடியும். நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு நமது சொந்த மொழியில் முறையாக யோசிக்கிறோமோ அவ்வாறே அநேக காது கேளாதவர் தங்கள் சைகை மொழியில் சிந்திக்கின்றனர்.

(தொடரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பணித் தளத்தில் கருவி

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம் யுத்தம், விபத்து, நோய், இயற்கை போன்ற காரணிகளால் உடல், உள பாதிப்புக்குள்ளானவர்களின் சமூக வாழ்வினை ஆரோக்கியமாக்கும் பொருட்டு பல செயற்றிட்டங்களூடாக அவர்களின் வாழ்வை மேம்படுத்தி வருகின்றது.

**கருவி நிறுவனம்**

**இல.290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு,**

**நீர்வேலி** எனும் முகவரியில் இருந்து தனது பணிகளை முன்னெடுக்கின்றது.

தொலைபேசி: 021 205 4224,0773246876


மின்னஞ்சல்: karuvi.org@gmail.com



கருவி நிறுவனம் இயலா நிலையிலுள்ள அங்கத்தவர்களுக்கு மாதம் ஒரு பொதி எனும் செயற்றிட்டத்தினூடாக உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது.



கருவி உற்பத்தி சந்தைப்படுத்தல் அலகினூடாக கருவி திரவ சலவை சவர்க்காரம் (கருவிசைன்) கருவி கைகழுவி (hands wash) என்பவற்றை யும் தயாரித்து சந்தைப்படுத்தி வருகின்றது. இதனூடாக மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றது.



சூழல் நேய அலகினூடாக சூழலுக்கு அணுக்க மான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பழைய கடதாசிகள், பிளாஸ்ரிக் ஆகியவற்றை சேகரித்து மீள்சுழற்சிக்கு வழங்குதல். துணிப் பைகள்,பிள்ளைகளை நிறை எடுப்பதற்கான பைகள், வாகன துடைப் பான்கள் போன்றவற்றைத் தயாரித்தல்.



மாற்றுத் திறனாளிகளின் சுய தொழிலினை மேம்படுத்த உதவிகளை வழங்கி வருகிறது.

கருவி நிறுவனத்தின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதனூடாகவும் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியல் அபிவிருத்திக்கு உங்களால் பங்களிப்புச் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNA INDUSTRIES




அண்ணா தொழிலகம் இணுவில் தெற்கு, இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org